# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2031 மார்கழி 12 புதன்கிழமை (27-12-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:31




மிருசுவில் வடக்கில் படித்த மகளிர் குடியேற்றத் திட்டப் பகுதியில் நேற்றுமுன்தினம் தோண்டப்பட்ட மனிதப் புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட சடலங்களில் இரண்டை மேலே படங்களில் காணலாம். மீட்கப்பட்ட எட்டுச் சடலங்களும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நேற்று வைக்கப்பட்டிருந்த சமயம் எடுக்கப்பட்ட படங்கள் இவை. (மேலும் படங்கள் 11ஆம் பக்கத்தில்)

# கடும் புயல் மழையால் 65 ஆயிரம் குடும்பங்கள் கிழக்கில் இடம்பெயர்வு!

## திருமலை மாவட்டத்துடன் தொடர்புகள் துண்டிப்பு!

மட்டக்களப்பு,டிசெம்பர்27

**வடக்கு - கிழக்குப் பகுதிகளில் கடந்த 48 மணித்தியாலங்களுக்கும் மேலாகப் பலத்த மழை பெய்து வருகிறது. கிழக்கில் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் பலத்த மழையுடன் கூடிய புயலால் 65 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது. திருமலையில் பரவலாக மோசமான பாதிப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றன. அந்த மாவட்டத்துடனான சகல தொடர்புகளும் துண்டிக்கப்பட்டிருக்கின்றன.**

வங்காள விரிகுடாவில் தோன்றியுள்ள தாழமுக்கத்தை அடுத்தே நாட்டின் வடக்கு - கிழக்குப் பகுதிகளில் மோசமான காலநிலை மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதாக வானிலை அவதான நிலையம் அறிவித்திருக்கின்றது. இந்தப் பிரதேசங்களைக் கடும் புயற்காற்று தாக்கும் ஆபத்து இருப்பதாக நேற்று முன்னிரவு எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

யாழ்.குடாநாடு மற்றும் வன்னிப் பிராந்தியத்திலும் கடும் மழை பெய்து

(12ஆம் பக்கம் பார்க்க)

### பொலீஸ் குழு விசாரணை

மிருசுவில் வடக்குப் பகுதியில் புதைகுழியில் இருந்து சடலங்கள் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ.எம்.சமரக்கோன் தலைமையிலான குழு விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் அந்தப் பகுதி பொது மக்களிடம் இருந்து வாக்குமூலங்களை இந்தக் குழு பதிவு செய்து வருகின்றது.

இந்தக் குழுவில் பொலீஸ் கான்ஸ்டபிள்களான பி.எஸ்.ஹென்றிக், பண்டார, கொடிதுவக்கு, சிறில் சோமதிலக, எஸ்.தியாகராசா, குமால் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். (ஐ-3)

## இன்று மூன்று விமான சேவைகள்

யாழ்ப்பாணம்,டிசெ.27

காலநிலை சீராக இருக்கும் பட்சத்தில் இன்று மூன்று விமான சேவைகள் இடம்பெறும் என்று யாழ்.சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

முதலில் வருபவருக்கு முதல் இடம் என்ற அடிப்படையில் பயணிகள் அனுப்பப்படுவர் என்றும்-

பயணிகளை அனுப்பும் பணி காலை 6 மணி முதல் யாழ்.சிவில் நிர்வாக அலுவலகத்தில் ஆரம்பிக்கும் என்றும் - அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய சேவையில் பயணம் செய்வதற்காகப் பலாலிக்குச் சென்று பயணம் தடைப்பட்டதன் காரணமாகத் திரும்பியவர்களையும் -

நேற்றுப் பயணச்சீட்டுப் பெற்றவர்களையும் இன்று சமுகம் தரும்படி கேட்கப்பட்டுள்ளது. (ஐ-3-15)

## கொலையுண்டவரின் மனைவி ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம்,டிசெ.27

மிருசுவில் புதைகுழியில் இருந்து சடலமாக மீட்கப்பட்டவர்களில் ஒருவரான செல்லத்துரை தேவகுலசிங்கம் (வயது 21) என்பவர் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்பே திருமணம் செய்தவர் என்றும் -

இவர் கொல்லப்பட்ட செய்தி அறிந்ததும் அவரது இளம் மனைவியான ஜெயசுதா (வயது 20) மயங்கிய நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-3)



புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட ஐந்து வயதுச் சிறுவனான வில்வராஜா பிரசாந்த் என்பவரின் சடலம் இது. இவரது சடலத்தில் வலது கால் முழங்காலுக்குக் கீழே திருகி முறிக்கப்பட்டு புறம்பாகக் காணப்பட்டது. (ஐ-3)

## குடும்பங்களுக்கு 2 லட்சம் ரூபா நஷ்டஈடு

யாழ்ப்பாணம்,டிசெ.27

மிருசுவில் வடக்கில் வீடுகளைப் பார்க்கச் சென்ற சமயம் அங்கு கொன்று புதைக்கப்பட்ட எட்டுப்பேரது குடும்பத்துக்கும் தலா 2 லட்சம் ரூபாவை நஷ்டஈடாக வழங்க வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பணிப்புரை விடுத்துள்ளார்.

முதற்கட்டமாக இறுதிக்கிரியைச் செலவுக்காக ஒவ்வொருவரின் குடும்பத்துக்கும் 50 ஆயிரம் ரூபா உடனடியாக வழங்கப்பட்டுள்ளதாக ஈ.பி.டி.பியின் யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வி.கே.குகேந்திரன் தெரிவித்தார். (ஐ-3)

## மிருசுவில் சம்பவம்

# குரல்வளை அறுக்கப்பட்டே எட்டுப் பேரும் படுகொலை!

## சடலங்கள் உறவினரிடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.27

மிருசுவில் வடக்குப் பகுதியில் புதைகுழி ஒன்றில் இருந்து சடலங்களாக மீட்கப்பட்ட எட்டுப்பேரும் ஒரே விதமாக குரல்வளை அறுக்கப்பட்டே கொலை செய்யப்பட்டிருப்பதாக வைத்திய வட்டாரங்களில் இருந்து தெரியவந்தது.

இந்தச் சடலங்கள் நேற்று பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனை செய்யப்பட்டன. பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி எஸ்.கதிரவேற்பிள்ளை பிரேதபரிசோதனையை மேற்கொண்டார். அதன் பின்னர் சடலங்கள் அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டு நெல்லியடிப் பகுதியில் வைத்து உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

இந்தக் கொலைகள் தொடர்பான மரண விசாரணை நாளை வியாழக்கிழமை நடைபெறும் என்று சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் ஏ.பிரேம்சங்கர் அறிவித்துள்ளார். சடலங்களைத் தகனம் செய்யாமல் அடக்கம் செய்யுமாறும் அவர் உத்தரவிட்டுள்ளார்.

(ஐ-3-15-109-117-173)

# திருகி முறித்த நிலையில் சிறுவனின் வலது கால்!

புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட சடலங்களில் ஐந்து வயதுச் சிறுவனின் சடலத்தில் அவனது வலது கால் திருகி முறிக்கப்பட்டுக் காணப்படுகிறது.

புதைகுழிக்குள் சடலங்கள் போடப்பட்டு மேலே சிவப்பு நிறச் சேலை ஒன்றினால் மூடப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. சிறுவனின் சடலமே குழியின் ஆழத்தில் கடைசியாக மீட்கப்பட்டது. புதைகுழிக்குள் இருந்து சிறு பெண்கள் அணியும் 'பெனியனும்' ('வெஸ்ட்') துணித் துண்டுகள் சிலவும் மீட்கப்பட்டிருக்கின்றன.

'ஸ்ரெச்சர்' போன்று பயன்படுத்தப்பட்ட சாக்குக் கட்டில் ஒன்றின் பாகங்களும் புதைகுழிக்கு அருகே கண்டெடுக்கப்பட்டுள்ளன. சடலங்களைத் தூக்கி வந்து குழிக்குள் போட சாக்கில் செய்யப்பட்ட 'ஸ்ரெச்சர்' பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது.

மணல் பாங்கான இடத்தில் புதைக்கப்பட்டிருந்ததாலேயே சடலங்கள் பெரிய அளவில் உருக்குலையவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-3-15-117-173)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# NEW SCIENCE HALL

கன்னாதிட்டி வீதி - யாழ்ப்பாணம்.

## 2003 - A/L

கணித, உயிரியல் பிரிவுகளுக்கான வகுப்புக்கள்

**ஆரம்பம் : நாளை (28.12.2000) வியாழன் காலை 8.00 மணி (பழைய நேரம்)**

குறிப்பு:- 2003 - A/L - கணித, உயிரியல் பிரிவுகளுக்கு அனுமதி பெற்ற மாணவர்கள் அனைவரும் அனுமதிபெற்ற பற்றுச்சீட்டுடன் நாளை (28.12.2000) வியாழக்கிழமை காலை 8.00 மணிக்குச் சமுகமளிக்கவும். (82143)



# வேகமான விற்பனை

**2001 ஆம் ஆண்டுக்கான கலண்டர்கள், டயறிகள் வியக்கத்தக்க விலையில் விற்பனையாகின்றன.**

- மனேஜ்மன்ற் டயறிகள் 200/= மட்டுமே.
- வியாபார ஸ்தாபனங்களின் பெயர் பொறிக்கக் கூடிய கலண்டர்கள் 9/= மட்டுமே.
- Desk டயறிகளில் மிருதுவான முகப்பைக் கொண்டவை, 2 கவர்களைக் கொண்டவை, கிளிப் போட்டவை வர்ணப் படங்களைக் கொண்டவை என நான்கு புதிய டிசைன்கள்.
- Leela Pocket, Leela Slim டயறிகள்.
- பாடசாலை உபகரணங்கள், எழுது பொருள்கள், காகிதாதிகள்.

இவை அனைத்தும் மொத்த விலையிலும் சில்லறை விலையிலும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்:-

**PAPER HOUSE**

**300, Hospital Road, Jaffna.**

(C14473)



## 2001 ஆம் வருட லீலா டயறிகள்

# விற்பனையாகின்றன

**உதயன் பணிமனை**

361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(C/14465)



கால் நூற்றாண்டு கால வரலாறு கண்ட

*பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின்*

# வெள்ளிவிழா மலர் வெளியீடு

**இன்று (2000.12.27) புதன்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மண்டபத்தில்**

வடமாகாண தெங்கு பனம்பொருள் கூ.ச. சமாசத்தின் தலைவர்

**திரு.கி.பூபாலசிங்கம்**

அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில்

யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர்

**திரு.து.வைத்திலிங்கம்**

அவர்கள் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்வார்கள்.

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

மலர்க் குழு,
பனை தென்னை வள அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கங்களின்
வெள்ளி விழா அமைப்பு. (C/14472)


# கண்ணீர் அஞ்சலி

எமது யாழ். பிரதேச செயலகத்தைச் சேர்ந்த
கிராம உத்தியோகத்தரும், நலன்புரிச் சங்க உப தலைவரும் ஆகிய

**கியூபேட் ஆனந்தராஜன்**

அவர்களின் தந்தையார்

## குழந்தை இராசதுரை

அவர்கள் 25.12.2000 அன்று காலமானதையிட்டு மனம் கலங்கி நிற்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*பிரதேச செயலரும்,*
*அனைத்து*
*உத்தியோகத்தர்களும்.*

நலன்புரிச் சங்கம்,
யாழ்.பிரதேச செயலகம்.

(82146)

## திரிபோஷா பைக்கற்றுகள் சேதம்

திருகோணமலையில் இருந்து யாழ்ப்பாணத்துக்குக் கப்பல் மூலம் கொண்டுவரப்பட்ட திரிபோஷா பைக்கற்றுக்களில் 750 திரிபோஷா மா உடைந்து சேதமடைந்த நிலையில் வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒவ்வொன்றும் 30 பைக்கற்றுக்களைக் கொண்ட 2 ஆயிரம் பொதிகளில் திரிபோஷா எடுத்துவரப்பட்டது.

நீண்ட காலத்தின் பின்னர் கடந்த 11ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவரப்பட் திரிபோஷா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் மூலம் தற்பொழுது விநியோகம் செய்யப்பட்டுவருகிறது. (ஐ-5)

## மரணச் செலவுக்கு நிதி உதவி

மிருசுவில் வடக்கில் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட 8 பேரின் மரணச்சடங்குச் செலவுக்கென வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கு தமிழ் விவகார அமைச்சினால் தலா 50 ஆயிரம் ரூபா நேற்று வழங்கப்பட்டது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் இந்த நிதி இறந்தவர்களின் குடும்பத்தவர்களிடம் ஈ.பி.டி.பி உறுப்பினர்களால் கையளிக்கப்பட்டது. (ஐ-5)


## கோழிக்குஞ்சுகள் விற்பனைக்கு!

பிறிமா இன புறொயிலர் பேட்டுக் குஞ்சுகளுக்கு பதிவுசெய்தவர்கள் இன்று (27-12-2000) புதன்கிழமை பெற்றுக் கொள்ளவும்.

**தம்பிப்பிள்ளையும் மைந்தரும் நகைமாடம்**

**343,K.K.S. றோட்,**
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: இல.3353 (82142)



## மாணவர்கள் கவனத்துக்கு!

வகுப்புகள் யாவும் வழமை போல் ஆரம்பமாகிவிட்டன. அனைவரும் ஆரியகுளம் சந்தியூடாக வகுப்புக்களுக்கு வரும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

நிர்வாகி,
**விக்னா கல்வி நிறுவனம்**
(82152) யாழ்ப்பாணம்.



## லஷ்சுமி சினிமா

இணுவில்

**விஜய், சிம்ரன் நடித்த**

**துள்ளாத மனமும் துள்ளும்**

(றீல்ஸ்) காட்சிகள் 10.30, 2.30 (ப.தே.)

(82157)



## நாகம்ஸ் சுன்னாகம்

**விஜய், ஜோதிகா நடிக்க**

*S.J.சூர்யாவின்*

**குஷி**

தினசரி - 11.00, 2.30 (ப.தே.)

29.12.2000 முதல்
நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்த

**TITANIC**

(தமிழ்)

(82148)



## ராஜா யாழ்ப்பாணம்

**விஜய், மோனிக்கா, ரம்பா, மணிவண்ணன்**

மற்றும் பலரின்
விந்தியாசமான நடிப்பில்

**மின்சாரக்கண்ணா**

காட்சிகள்: 10.30, 2.00 (ப.தே.)

(C/14477)



யாழ்ப்பாணம்

# மத்திய கல்லூரி

உள்ளக விளையாட்டுக் கழகம்

## மக்கள் வங்கி வடவலயத்தின்

அனுசரணையுடன் முன்னாள் அதிபர்

## கலாநிதி D.T.நைல்ஸ்

ஞாபகார்த்தமாக நடத்தும்

## உள்ளக விளையாட்டுப் போட்டிகள்

1) பட்மின்ரன்
2) மேசை வரிப் பந்தாட்டம்
3) கரம்
4) சதுரங்கம்

**பிரிவுகள் (ஆண்கள் / பெண்கள்)**

1) 10 வயதின் கீழ் 1991 ஆம் ஆண்டின் பின் பிறந்தவர்கள்.
2) 12 வயதின் கீழ் 1989ஆம்/90ஆம் ஆண்டுகள் பிறந்தவர்கள்.
3) 14 வயதின் கீழ் 1987ஆம்/88ஆம் ஆண்டுகள் பிறந்தவர்கள்.
4) 16 வயதின் கீழ் 1985ஆம்/86ஆம் ஆண்டுகள் பிறந்தவர்கள்.
5) திறந்த அடிப்படை - வயதுக் கட்டுப்பாடு இல்லை.

*விண்ணப்ப முடிவு திகதி : 20. 01. 2001 மாலை 4 மணி*
*வீரர் ஒழுங்கு தெரிவு : 21. 01. 2001 மாலை 3 மணி*
*போட்டிகள் ஆரம்பம் : 25. 01. 2001 மாலை 3 மணி*

**திரு.வி.எஸ்.மகேந்திரன்,**
விளையாட்டுத்துறைப் பொறுப்பாசிரியர்

**திரு.ஜெ.மோகன்,**
உள்ளக விளையாட்டுப் பொறுப்பாசிரியர்

(82151)


# 61 ஆம் நாள் நினைவு தினம்

மண்ணில் மலர்ந்தது
14 - 11 - 1969



விண்ணில் கலந்தது
29 - 10 - 2000

## அமரர் கனகு சந்திரகுமார்

(கோப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திச் சங்க ஊழியர்)

அறிவில் சிறந்து
அன்பைச் சொரிந்து
பாச மனங்களில்
ஆழப் பதிந்த எங்கள் அன்புத் தெய்வமே!
ஐயா சந்திரன்
எங்கள் உடன் பிறப்பே!
ஐயா உம்மைப் பிரிந்து
நாள் அறுபத்தொன்று என்ன ஐயா
ஆயிரம் ஆனாலும் நாம் ஆறமாட்டோம்
துயர் ஆறாது; கவலை மாறாது.
உன் பிரிவால் வாடுகிறோம்.
எங்கள் அன்புச் செல்வமே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய சந்நிதி முருகனைப் பிரார்த்திக்கின்றோம்.

*சிறுப்பிட்டி தெற்கு,*
*கலைஒளி வீதி,*
*நீர்வேலி.*

உன்பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்,
ஐயா, அம்மா, சகோதரர்,
அத்தான்மார், மச்சான்மார்.

(82140)

# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை கனகரத்தினம்

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கனகரத்தினம் நேற்று (26-12-2000) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் இ.இரத்தினமலர் (மானிப்பாய்), க.மகேந்திரன்(கனடா), க.மகாதேவன்(லண்டன்), மு.மல்லிகா தேவி(லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், இலகுநாதன் (டோகா), நளினலோசனா(கனடா), கலைவாணி(லண்டன்), முருகதாஸ் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், மதன், நிலானி, நிருஷா, பிறைனா, திவ்வியன்(கனடா), விஜோஷன்(லண்டன்), கீர்த்தனா (லண்டன்), பிரணவன்(லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27-12-2000) புதன்கிழமை காலை 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிப்பிலி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*71,உடுவில் வீதி,*
*மானிப்பாய்.*

தகவல்:-
சோ.இலகுநாதன்.
(மருமகன்)

(82145)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# உதயன்

## மிருசுவில் படுகொலைகள்

அப்பாவித் தமிழ்ப் பொது மக்கள் — நிராயுதபாணிகளான தமிழ் மக்கள் — காணாமற் போவதும், படுகொலை செய்யப்பட்டுப் புதைகுழிகளில் புதைக்கப்படுவதும் தமிழ் மண்ணில் தொடரும் கொடுமைகள் ஆகிவிட்டன. மிருசுவில் வடக்கில் ஒரே புதைகுழியில் இருந்து எட்டு அப்பாவித் தமிழர்களின் சடலங்கள் எடுக்கப்பட்ட சம்பவம் அந்த நீண்ட வரிசையில் ஆகப் பிந்திய பயங்கரமாகும்.

ஐந்து வயதுச் சிறுவன் ஒருவன் உட்பட தங்கள் வீடுகளைப் பார்வையிடச் சென்றவர்கள் கழுத்து வெட்டப்பட்டு, கொடூரமாகக் கொலை செய்யப்பட்டும் புதைக்கப்பட்டிருக்கிறார்கள்.

தீவிரமான போரின் மத்தியில், உயிர் பிழைத்தால் போதும் என்ற ஒரே எண்ணத்துடன், வீடுவாசல்களையும் ஏனைய உடைமைகளையும் விட்டுவிட்டு இடம்பெயர்ந்தவர்கள் தென்மராட்சி மக்கள் — மிருசுவில் மக்கள்.

தாம் விட்டு வந்த வீடுகளைப் பார்வையிடச் சென்றவர்கள், அங்கு நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் தமக்குத் தீங்கு இழைக்கமாட்டார்கள் என்று நம்பிச் சென்றவர்கள், இரக்கமற்ற விதத்தில் மிருகத்தனமாகக் கொன்று புதைக்கப்பட்டிருக்கிறார்கள்!

செம்மணிப் படுகொலைகள் — புதைகுழிகள், கிருஷாந்தி கொலை வழக்கு, அரியாலைப் புதைகுழிகள் என்று ஏற்கனவே இராணுவ அட்டூழியங்கள் பல சர்வதேச மட்டத்தில் அம்பலமாகி, அவமானம் சேர்ந்த பின்னரும் காணாமற் போதலும், புதைகுழிகளும் தொடர்கின்றன.

இரண்டொரு சம்பவங்களில் குற்றமிழைக்கும், படுகொலை செய்யும் படையினர் நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டாலும், தமிழர்களைக் கொல்லுதல், சித்திரவதை செய்தல், துன்புறுத்துதல், மனித உரிமைகளை மீறுதல், ஆகியவற்றை ஆயுதப்படையினர் நிறுத்த மாட்டார்கள் என்பதனையே மிருசுவில் சம்பவம் எடுத்துச் சொல்கிறது.

மேலதிகாரிகள் இதுபோன்ற அக்கிரமங்களை விரும்பாதவர்களாக இருப்பினும், குற்றமிழைக்கும் படையினரைத் தண்டித்தாலும், ஆயுதப்படையின் அடிமட்டத்தினர் திருந்த மாட்டார்கள் என்பதனையும் மிருசுவில் சம்பவம் இடித்துக் கூறுகிறது.

ஆயுதப்படையினர் தமிழர்களை விரோதிகளாக, எதிரிகளாக, பகைவர்களாகக் கருதும் மனவுக்கு அவர்களிடம் குரோதமும், அடக்குமுறை மனோபாவமும் வளர்க்கப்பட்டிருக்கின்றன. அவர்களின் மனங்களில் வேரூன்றிப் பதிக்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் பகுதிகளில் அவர்களின் பிரசன்னமும், "ஆட்சியும்" இருக்கும் வரை இந்தக் கொடுமைகள் குறையவே மாட்டா.

தமிழர்களின் உரிமைகளை நியாயமானமுறையில் வழங்கி, நீதியான அரசியல் தீர்வு ஒன்றைக் கண்டால் மட்டுமே —

போரை நிறுத்தி பேச்சு வார்த்தை மூலம் தீர்வு கண்டு சமாதானத்தை உருவாக்கினால் மட்டுமே —

ஆயுதப்படையினர் நடத்தும் தமிழர் படுகொலைகளை நிறுத்த முடியும்.

சமாதானப் பேச்சு, போர் நிறுத்தம் ஆகியவற்றுக்கான சூழ்நிலை உருவாகியுள்ள இந்தச் சந்தர்ப்பத்தை அரசு தக்கவாறு பற்றிக் கொள்வதே அதற்கான ஒரே மார்க்கம். அதற்கு அரசு பின்னடித்தால் அரசு தமிழரை அழிக்கும் உள்நோக்கத்துடனேயே செயற்படுகிறது என்பது சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபணமாகிவிடும்.

---

### விஷேட கொடுப்பனவு வழங்கக்கோரி

# வட. - கிழக்கில் உதவி மருத்துவர் அடுத்த மாதம் முதல் போராட்டம்

கொழும்பு, டிசெ. 27

வடக்கு - கிழக்கில் அரச வைத்தியர்களுக்கு வழங்கப்படத் தீர்மானிக்கப்பட்டிருக்கும் விஷேட கொடுப்பனவைப் பதிவு செய்யப்பட்ட மற்றும் உதவி மருத்துவர்களுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அப்படி வழங்கப்படாது போனால் ஜனவரி மாதம் 8 ஆம் திகதி முதல் உதவி மருத்துவர்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்கப் போவதாகவும் அறிவித்துள்ளனர்.

அரசாங்க மருத்துவ அதிகாரிகளைப் போன்றே பதிவு செய்யப்பட்ட மற்றும் உதவி மருத்துவர்களும் வடக்கு — கிழக்கில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்ட வண்ணம் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் சுகாதார அமைச்சு எமது விடயத்தில் உரிய கவனம் செலுத்தாமல் உதாசீனப் போக்கை கடைப்பிடிக்கின்றது;

அரச மருத்துவ அதிகாரிகளுக்கு ஜனவரி மாதம் முதல் விஷேட கொடுப்பனவை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. பதிவு செய்யப்பட்ட மற்றும் உதவி மருத்துவர்கள் விடயத்தில் இந்தக் கொடுப்பனவு மறுக்கப்பட்டு வருகின்றது.

ஜனவரி 8 ஆம் திகதிக்குள் இந்த விஷேட கொடுப்பனவைத் தங்களுக்கும் பெற்றுக் கொடுக்கக்கூடிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ளாவிடில் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்குவதெனப் பதிவு செய்யப்பட்ட மற்றும் உதவி மருத்துவ அதிகாரிகள் சங்கம் தீர்மானித்துள்ளது.

இந்தத் தொழிற்சங்கப் போராட்டத்தில் வடக்கு - கிழக்கில் கடமையாற்றும் சங்கத்தின் 250 அதிகாரிகள் கலந்துகொள்வர் என்று பதிவு செய்யப்பட்ட மற்றும் உதவி மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

(ஐ-8)

---

## அதிபர்கள் கூட்டம்

தென்மராட்சி, டிசெ. 27

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்களுக்கான கூட்டம் இன்று புதன்கிழமை காலை 10.00 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

2001ஆம் ஆண்டுக்கான இலவச சீருடைகள் வழங்குவதற்காக தற்போது பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களின் விபரங்களை வகுப்பு ரீதியாகக் கொண்டு வருமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

(ஐ-117)

---

# தீவக வலயப் பாடசாலைகளில் புதிதாகப் 11 ஆசிரியர்கள் நியமனம்

யாழ்ப்பாணம், டிசெ. 27

தீவகக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கும் புதிதாக ஆசிரிய நியமனம் பெற்றவர்களை இன்று காலை 9-30 மணிக்கு தீவகக் கல்விவலய அலுவலகத்துக்கு சமுகமளித்து நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு தீவகக் கல்வி வலயப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

நியமனக் கடிதங்களைப் பெற்று உரிய பாடசாலைகளில் கடமையேற்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

★ க.சுதாகரன் (5ஆம் வட்டாரம், நெடுந்தீவு)

★ ந.ரமணன் (12ஆம் வட்டாரம், நெடுந்தீவு)

★ செல்வி கு. கஸ்தூரிதிலகம் (5ஆம் வட்டாரம், நெடுந்தீவு)

★ செல்வி த.தவனேஸ்வரி (12 ஆம் வட்டாரம், நெடுந்தீவு)

★ செல்வி அந்தோனிப்பிள்ளை மேரிஜாக்குலின் (8 ஆம் வட்டாரம், நெடுந்தீவு)

★ பி இரட்ணராஜ் (11 ஆம் வட்டாரம், நெடுந்தீவு)

★ கு. செல்வகுமார் (2 ஆம் வட்டாரம், நெடுந்தீவு).

★ தி ஜயந்தன் (கரம்பன் கிழக்கு, ஊர்காவற்துறை)

★ செல்வி கா. ரூபாராணி (கருங்காலி, காரைநகர்)

★ செல்வி வ. திலீபா (புளியங்கூடல், ஊர்காவற்றுறை).

★ த. தனேந்திரன் (சரவணை, நாச்சிமார் கோயிலடி, வேலணை).

(ஐ-8)

---

## ஆசிரியர் சம்பளம்

யாழ்ப்பாணம், டிசெ 27

வேம்பொடுகேணி பாடசாலை ஆசிரியர்களுக்கான டிசெம்பர் மாதச் சம்பளம் இன்று புதன்கிழமை காலை 9மணி முதல் மதியம் 12மணி வரை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் வைத்து வழங்கப்படும் எனப் பாடசாலை அதிபர் எஸ். ராமலிங்கம் அறிவித்துள்ளார்.

(ஐ-8)

---

# நேர்மை நடுநிலைமையுடன் செய்திகளை வெளியிடுபவனே சிறந்த பத்திரிகையாளன்

## "பாதுகாவலன்" குடும்ப ஒளி விழாவில் உரை

யாழ்ப்பாணம், டிசெ. 27

பத்திரிகையாளர்கள் நடுநிலைமை தவறாது கடமை உணர்வுடன் செய்திகளை உள்ளபடியேவெளியிட வேண்டும்.

இவ்வாறு இளவாலை மறைக் கோட்ட குருமுதல்வர் அருட்தந்தை ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் கூறினார்.

பாதுகாவலன் பத்திரிகையின் குடும்ப ஒளிவிழாவில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு அவர் உரை நிகழ்த்தினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்ததாவது:-

எமதுமண்ணில் சண்டைகள் நடைபெறும் போது உண்மைகளை வெளிக் கொணர பாடுபடும் பத்திரிகையாளனது உயிருக்கு அச்சுறுத்தல் மற்றும் நெருக்கடிகள் ஏற்படுகின்றன. இப்படியான சூழ்நிலை இருந்தாலும்கூட பத்திரிகையாளன் ஒரு பக்கத்தினருக்கு சார்பாகவோ அல்லது ஒரு பக்கத்தினரைச் சாடியோ செய்திகளை வெளியிடக்கூடாது.

எந்தச் சந்தர்ப்பத்திலும் நடுநிலைமை தவறாதவனாக அவன் செயற்பட வேண்டும். இது ஒரு கடினமான அனுபவமாக இருந்தாலும்கூட கடமை உணர்வுடன் செயற்பட வேண்டும்.

உலகில் பிரசித்திபெற்ற செய்தி ஊடகங்களில் பணியாற்றும் செய்தியாளர்கள் தமது உயிரையே பணயம் வைத்து யுத்த முனைகளுக்குக் கூட நேரில் சென்று உண்மை நிலைமைகளை அப்படியே வெளிப்படுத்துகின்றனர்.

மேலைத்தேச நாடுகளில் பத்திரிகைகள் நடுநிலைமை தவறாமை என்ற கருத்தில் இதயசுத்தியுடன் அதிக கவனஞ் செலுத்துகின்றன. ஆனால் எமது நாட்டைப் பொறுத்தமட்டில் இதில் எவருமே பெரிதும் அக்கறை செலுத்துவதாகத் தெரியவில்லை. இதுமிகவும் வருத்தத்துக்குரிய ஒரு செயற்பாடாகும்.

பத்திரிகையாளர் தமது சுயலாபத்துக்கும், விருப்பு வெறுப்புகளுக்கும் கட்சிகளின் கொள்கைகளுக்கும் ஏற்றவிதமாக தமது செய்திகளின் திசையை திருப்பிவிடுகின்றனர் இது மிகவும் கண்டிக்கப்பட வேண்டிய விடயம் ஆகும்.

இந்தச் செயல்களின் மூலம் மக்களின் உண்மையான நிலைப்பாட்டை வெளிப்படுத்த முடியாமல் போகிறது. ஒரு சில பத்திரிகையாளர்கள் இதய சுத்தியுடன் செயற்பட்டால் மட்டும் போதாது; பத்திரிகையாளர் அனைவரும் இதில் ஒரே மனநிலைப்புடன் கடமையாற்ற வேண்டும்.

பாதுகாவலன் பத்திரிகையின் செய்தியாளர்களாகப் பலர் உருவாகி இருப்பது எனக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. உங்களிடம் கூட நான் இதே அழைப்பைத்தான் விடுகின்றேன். எந்தச் சந்தர்ப்பத்திலும் நடுநிலைமை தவறாது இதய சுத்தியுடன் உங்களின் இந்தப் புனிதமான பணியைத் தொடர்ந்து செய்வதற்கு இறைவனின் அருள் கிடைக்கட்டும்.

இப்படி அவர் கூறினார்.

பாதுகாவலன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் அருட்தந்தை ரூபன்மரியாம்பிள்ளை தமது உரையின்போது கூறியதாவது:

யாழ்ப்பாணத்தில் இன்றைய சூழ்நிலையில் பல்வேறு பிரச்சினைகளுக்கு ஒரு பத்திரிகையாளன் முகம் கொடுக்கவேண்டி இருக்கிறது அவற்றிலும் குறிப்பாக உயிருக்கு ஆயுத முனையில் அச்சுறுத்தல்கள் விடப்பட்டுள்ளன அரசியல் ரீதியாகப் பயமுறுத்தப்படுகிறார்கள், தனிப்பட்ட முறையில் மிரட்டப்படுகிறார்கள். இதற்கும் மேலாகச் செய்தித் தணிக்கை, கட்டுப்பாடுகள் பல கோணங்களில் முடுக்கி விடப்பட்டுள்ளது.

இப்படியான ஒரு குழப்பகரமான சூழ்நிலையிலும் அழுத்தங்களுக்கு முகம் கொடுத்தே பத்திரிகையாளன் பணியாற்ற வேண்டியிருக்கிறது.

பத்திரிகையாளனது பங்கு இன்று ஒரு சவால் மிக்க பணியாக மாறிவிட்டது. இத்தகைய சவால்களுக்கு மத்தியில் எதிர் கொள்ளும் பிரச்சினைகளுக்கு துணிவுடன் முகம் கொடுத்தே ஒரு பத்திரிகையாளன் செயற்படுகின்றான். தன்னை முழுமையாக அர்ப்பணிக்கின்றான்.

இந்த கடினமான பணியை செய்வதற்கு பத்திரிகையாளர்கள். எமது மண்ணில் இன்று அழைக்கப்படுகின்றார்கள் அவர்கள் இதற்கு முன்வர வேண்டும்.

கத்தோலிக்க மக்களின் ஒரே பத்திரிகையாக யாழ்ப்பாணத்தில் வெளிவரும் எமது பாதுகாவலன் பத்திரிகைக்கு அனைத்து பங்குகளில் இருந்தும் செய்தியாளராகக் கடமையாற்ற பலர் முன்வந்திருப்பது எமக்கு மன மகிழ்ச்சியைத் தருகிறது.

நாம் எமது செய்தியாளர்களுக்கு எதுவித ஊதியமும் கொடுப்பதில்லை. இருந்தும் இறை புனிதமான பணிக்கு உங்களின் ஆதரவு கிடைத்திருப்பது இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தருகிறது இதற்குரிய கைம்மாறை இறைவன் உங்களுக்குத் தருவார்--என்றார்.

இந்த ஒளிவிழாவில் பாதுகாவலன் பத்திரிகையின் அச்சகப் பணியாளர்கள் செய்தியாளர்களும் மற்றும் பாசையூர், குருநகர், [illegible], இளவாலை, பருத்தித்துறை, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களைச்சேர்ந்த பாதுகாவலன் வாசகர் வட்ட பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

எளிமையான முறையில் கொண்டாடப்பட்ட இந்த விழாவில் பாதுகாவலன் வாசகர் வட்டத்தினரின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

(ஐ-9)

---

## நாளை

மார்கழி 13

வியாழக்கிழமை

திதி: திருதியை

வைகாறை 5.11 வரை

நட்சத்திரம்: உத்தராடம்

முற்பகல் 10.06 வரை.

செர்ப்போட்டாரம்பம்

நம்முரன்

சுபநேரம்: 07.58-09.28

ராகுகாலம்: 01.58-3.28

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

---

## உதயவாக்கு

குற்றவாளியைத் தண்டிக்காது விடுவது குற்றமற்ற நிரபராதிக்குச் செய்யும் கொடுமையாகும்.

— சைரஸ் —

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கூட்டுறவுக் கொள்கைக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்து
25 ஆண்டைப் பூர்த்தி செய்த
பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின்

"வெள்ளி விழா மலர்"
வெளியீடு
செய்வதைப் பாராட்டி வாழ்த்துகின்றேரம்.

அங்கத்தவர்கள்,
ஊழியர் நலன்புரிச் சங்கம்,
வலிகாமம் ப. தெ. வ. அ. கூ. ச. கொத்தணி.
மானிப்பாய். (சி/14468)

## The Jaffna Education Centre
## யாழ்ப்பாணக் கல்வி நிலையம்

(சாந்திசினிமா முன்பாக மேல்மாடியில்வலதுபக்கம்)

**Spoken English With Grammar**
**சிங்களம்**
**Short hand Typing**

ஆகிய பாடங்கள் இரு மொழிகள் மூலமும் கற்பிக்கப்படுகின்றன.


புதிய பிரிவு ஆரம்பம்: நாளை 28-12-2000

பயிற்சி முடிந்ததும் சான்றிதழ் வழங்கப்படும்.

இயக்குநர்
இ. லோகநாயகி.

[82135]

## விண்ணக வாழ்வின் 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
## ஜோசப் அருளப்பு

மடியில் கனியென 27-05-1942 — மண்ணில் விதையென 27-12-1985

பதினைந்து ஆண்டு ஆனதையா எமைவிட்டு நீர் பிரிந்து
மீண்டும் வரமாட்டீரோ மனமிங்கு ஏங்குதையா!
வாழ்ந்திட்ட காலமெல்லாம் விரும்புடனே உதவி நின்றீர்
வாழ்கின்றீர் உள்ளத்தில் வையகமும் உள்ளவரை
விழிமூடித் திறக்கையிலே தெரியுதையா உங்கள் முகம்
விழி திறந்து உளம் நிறைந்து வழிகாட்டி நின்றீர்
நல்ல பல அறிவுரைகள் நாளெல்லாம் சொல்லி நின்ற
வெள்ளை உள்ளம் சாய்ந்ததினால் ஏங்கையறியா தேங்குகிறோம்
புலம்பெயர்ந்து புவியெல்லாம் பிள்ளைகள் நாம் வாழ்ந்தாலும்
நிலையான உங்கள் புகழ் நானிலத்தில் நிறைந்து நிற்கும்
மண்ணை விட்டுப் பிரிந்தாலும் எம் நெஞ்சை விட்டு
அகலாது உம் நினைவுகள்.

உங்கள் ஆத்ம சாந்தியடைய குசையின் பாதத்தில் மண்டியிட்டுக் கொள்ளுகின்றோம்.

உம் நினைவில் நினைந்துருகும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள் பேரப்பிள்ளைகள்.

மானிப்பாய் வீதி,
கோப்பாய் மத்தி,
கோப்பாய். (82016)

## நூல் வெளியீட்டு விழா

வலி.வடக்கு, டிசெ. 27

சாந்திகம் அனுசரணையுடன் வெளியிடப்படும் 'மன நெருக்கீடு' புத்தக வெளியீட்டு விழா இன்று புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு இணுவில் மக்கிளியட் வைத்தியசாலையில் அமைந்துள்ள சாந்திகம் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

கொழும்பிலுள்ள குடும்ப புனர்வாழ்வு நிலையத்தின் திட்ட இணைப்பாளர் எ. எஸ். பூவேந்திரன் நூலை வெளியீட்டு வைக்கவுள்ளார். (ம-86)

## சம்பளக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், டிசெ. 27

சந்திரபுர ஸ்கந்தவரோதயா மகாவித்தியாலய ஆசிரியர்கள் தமது டிசெம்பர் மாத சம்பளக் கொடுப்பனவுகளை நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் வந்து பெற்றுக் கொள்ளலாம் என்று அதிபர் மு. பாலசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார். (ம-5)

## உதைபந்தாட்டம்

வலி. வடக்கு டிசெ. 27

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கினால் உதைபந்தாட்ட மத்தியஸ்தர் அமரர் அ.தம்பிராசா ஞாபகார்த்தமாக நடத்தப்பட்டுவரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் நாளை வியாழக்கிழமை மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகள் வருமாறு:-

இளவாலை யங் ஹென்றீஸ் வி. கழகம் எதிர் ஏழாலை கண்ணகி வி. கழகம். (ம-86)

## முறையீடு

யாழ்ப்பாணம், டிசெ. 27

சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக்கோட்டையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் கடந்த 23ஆம் திகதி தொடக்கம் காணாமல் போய் விட்டதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவில் உறவினரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாணிக்கம் சுரேந்திரராஜா என்பவரே காணாமல் போனவராவார். அன்றைய தினம் காலை 9.30 மணிக்கு வீட்டை விட்டு வெளியே சென்றவர் இதுவரையும் வீடு திரும்ப வில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

## ஒரே இரவில் மூன்று வீடுகளில் திருட்டு

சண்டிலிப்பாய், டிசெ. 27

மாதகல் காஞ்சிபுரம் பகுதியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு மூன்று வீடுகளில் திருடர் கோஷ்டியொன்று உட்புகுந்து பொருள்களைத்திருடிச் சென்றுள்ளது.

எஸ். வைரவநாதன் என்பவரது வீட்டில் 18 ஆயிரம் ரூபா பெறுமதியான நீர் இறைக்கும் இயந்திரம் ஒன்றையும், செல்லத்துரை குணம் என்பவரது வீட்டில் ஒரு சாக்கில் கட்டிவைக்கப்பட்டிருந்த செத்தல் மிளகாயையும், மண்எண்ணெய் பரல் ஒன்றையும், முருகையா என்பவரது வீட்டில் ஆட்டுக்கடா ஒன்றையும் இத்திருடர் கோஷ்டி திருடிச் சென்றுள்ளது.

இன்னுமொரு வீட்டில் திருடர்கள் உட்புகுந்த வேளையில் வீட்டுக்காரர்கள் விழித்துக் கொண்டு சத்தமிட்டதை அடுத்து திருடர்கள் அங்கிருந்து தப்பி ஓடி விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இத்திருட்டுச் சம்பவங்கள் பற்றி மாதகலிலுள்ள படைமுகாமிலும் இளவாலை பொலிஸ் நிலையத்திலிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-135)

## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

வரணர் குடியிருப்பு சொக்கன் கலட்டி
ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம் புனரமைப்புக்கு
ரூபா 1,00,000 /- நிதியுதவி வழங்கிய
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும்
வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும்
வடக்கு, கிழக்கு தமிழ் விவகார அமைச்சருமான

**கௌரவ கே. என். டக்ளஸ் தேவானந்தா**
அவர்கள்

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்
**திரு. வி. கே. குகேந்திரன் (ஜெகன்)**
அவர்கள்

பருத்தித்துறை பிரதேச சபைத்தலைவர்
**திரு. ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன் (ரங்கன்)**
அவர்கள்

பருத்தித்துறை பிரதேச சபை உபதலைவர்
**திரு. ப. ரவீந்திரன் (ராசீக்)**
அவர்கள்

சாவகச்சேரி நகரசபை உறுப்பினரும், ,
தென்மராட்சி அமைப்பாளருமான
**திரு. தூ. அலெக்சாண்டர் (சாள்ஸ்)**
அவர்கள்

ஆகியோரைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அம்பிகை அருள்புரிவாள் என்ற நம்பிகை எமக்குண்டு. மேலும் எமது ஆலயத்தைப் பூரணமாகப் புனரமைப்பதற்கு முழுமையான அர்ப்பணிப்புடன் சேவையை வழங்குவீர்கள் என ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.

சுபம்!

பரிபாலன சபையினரும்,
அம்பிகை அடியார்களும்,
ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம்,
வாணர்குடியிருப்பு, சொக்கன் கலட்டி,
புலோலி மேற்கு, பருத்தித்துறை.

இலங்கை வங்கி, பருத்தித்துறை.
சேமிப்பு கணக்கு இல:- 24944 (82131)

முருகேசு சபாநாதன் ஜே. பி. யூ. எம்.
சட்டத்தரணி
மல்லாகம்.

## அழைப்புக் கட்டளை

### இல. 16 பிரிவு 55 (1)

மல்லாகம்/ யாழ்ப்பாணம்/ மாவட்ட நீதிமன்றத்தில்

சிவானந்தகுமார் பெண்
சுலோஜினி
வட்டுக்கோட்டை கிழக்கு,
சித்தன்கேணி.

வழக்கு இல.
மணநீக்கம்/ 217 — வழக்காளி/கள்

எதிர்

சிவநாதன் சிவானந்தகுமார்
யூதா கோயிலடி,
அரியாலை.

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள எதிராளி/
எதிராளி/களுக்கு
மேலே பெயர் குறிப்பிட்டுள்ள வழக்காளி

இந்நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத் தொடர்ந்துள்ளாராதலினால், அதற்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின் 2001 ஆம் ஆண்டு தை மாதம் 15 ஆம நாளன்று அல்லது அதன் முன்னர் நீதிமன்றத்தில் கோட்பிடும்படி இத்தால் நீவிர் தேவைப் படுத்தப் படுவதோடு சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத் தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறுகட்சிக் காரரில்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்து கொள்ளுமாறு நீவிர் இத்தால் தேவைப்படுத்தவும் படுகின்றீர்:

பதிவுபெற்ற தரணி மூலம் நீர் தோன்றாவிடில், சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விவரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப் படுத்தப் படுகின்றீர்:

நீதிமன்றக் கட்டளைப்படி:
து. சிறீமோகன்
பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம்,
யாழ்ப்பாணம்.

குறிப்பு:- விளக்கத் தேதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க – நீதிமன்றத்தில் இவ்வழக்கு ஏற்படும் தேதி பற்றிய அறிவித்தலை நீவிர் பெறவிரும்பினால் பதிவு செய்யப்பட்ட முகவர் ஒன்றை இந்நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும் பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைப்பதற்கும் செலவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும், 80 ஆம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

[82141] பதிவாளர்.

பொதுசன நூலகம்

நோர்வேயின் மத்தியஸ்தத்துடன்

# யுத்தத்தை நிறுத்தி சமாதானப் பேச்சை ஆரம்பிக்க வேண்டும்

## ரெலோ அமைப்பு புத்தாண்டுச் செய்தி

யாழ்ப்பாணம்,டிசெ.27

கிடைத்துள்ள நல்ல சந்தர்ப்பத்தைப் பயனபடுத்தி, அரசாங்கம் உடனடியாக யுத்தத்தை நிறுத்தி, நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும்.

புத்தாண்டை முன்னிட்டு ரெலோ அமைப்பின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் என்.கே.விந்தன் வெளியிட்ட செய்திக்குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பிறக்கும் ஒவ்வொரு புது வருடமும் எங்கே சமாதானத்தைக் கொண்டு வருமோ? யுத்தம் ஓய்ந்த நிம்மதி வாழ்வைத் தருமோ? என்கின்ற எதிர்பார்ப்புடனேயே பிறக்கின்றது. குறிப்பாக ஒவ்வொரு தமிழ் மகனும் இந்த எதிர்பார்ப்புக்களை வருடா வருடம் ஏக்கத்துடன் நோக்குகின்றனர். கடைசியில் அரசு தமிழர்களை ஏமாற்றி வந்த வரலாறுகளைத்தான் திரும்பிப் பார்க்கின்றனர்.

தமிழ் மக்களின் தாயக பூமியான வடக்கு - கிழக்கு மாகாணத்தில் "புலிகளை ஒழித்தல்" என்ற பெயரில் ஓர் ஆக்கிரமிப்பு, அழிப்பு யுத்தத்தையே ஸ்ரீலங்கா அரசும் அதன் இராணுவமும் நடத்திக் கொண்டிருக்கின்றன.

அத்துமீறல் குடியேற்றங்கள், புலிகளுக்குப் பொருள்கள் போய்ச் சேர்ந்துவிடும் என்று பொய்யான காரணத்தைக் கூறி தமிழ் மக்கள் மீது பாரியளவிலான பொருளாதாரத் தடைகள், மீன்பிடி, போக்குவரத்துத் தடைகள், கண்மூடித்தனமான கைதுகள், சிறைக் கொடுமைகள், சித்திரவதைகள், மக்கள் குடியிருப்புக்கள் மீது விமானக் குண்டுவீச்சு, ஆட்லறி, மோட்டார், பல்குழல் போன்ற எறிகணைத் தாக்குதல்கள் என்று நூற்றுக் கணக்கான மனித உயிர்களைக் குடித்துள்ள இந்த யுத்தம் கால் நடைகளையும் ஏன் பூகோள ரீதியாக இயற்கைச் சூழலையும் கூட விட்டு வைக்கவில்லை.

இந்தப் போர் முடிவுக்கு வரவேண்டும். பிறக்கும் புதுவருடங்களில் நல்லது நடக்க வேண்டும் எனத் தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். இந்து, கிறிஸதவ மத குருமார்கள் கூட இதை எண்ணித்தான் வேண்டுகின்றனர். பிரார்த்திக்கின்றனர், பிரசங்கிக்கின்றனர். ஆனால் புத்த பிக்குமாரும் பேரினவாதிகளும் யுத்தம் வேண்டும், வேண்டும் என கூக்குரலிடுகின்றனர். அம்மணியும் அவரது அரசும் அவர்களது காலடியில்தான் வீழ்ந்து கிடக்கின்றனர்.

தொடர்ந்தும் யுத்தத்தில் தீவிர முனைப்புக் காட்டிவரும் இன்றைய அரசு புலிகளுடனான போரில் பல தடவைகள் தோல்வியைத் தழுவி வந்துள்ள நிலையில் வீழ்ந்தும் மீசையில் மண்படாதது போல் புலிகளை வெல்லலாம் எனப் பகற் கனவு கண்டு கொண்டிருக்கின்றது.

நாடு பாரிய அழிவுகளை எதிர் நோக்குகின்ற இந்தச் சந்தர்ப்பத்தில் சமாதான நல்லெண்ண முன் முயற்சிகளில் ஈடுபட்டுள்ள நோர்வே நாட்டுப் பிரதிநிதிகளிடம் தனது சமாதான நல்லெண்ண சமிக்ஞையை தலைவர் பிரபாகரன் வெளிப்படையாகவே கூறி விட்டார். அத்துடன் உலக சமாதானத்துக்காக தன்னை ஒப்புக் கொடுத்த இயேசுபிரான் பிறந்த நாளான நத்தார் பண்டிகையை முன்னிட்டு ஒரு மாதகால ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தையும் அறிவித்துள்ளார். சமாதானத்தை விரும்பும் உள்நாட்டவர்கள் மட்டுமல்ல சர்வதேச சமூகமும் இதை வரவேற்றுள்ளது.

அரசுக்கு இதைவிட வேறு சந்தர்ப்பம் தேவையில்லை. கிடைத்துள்ள இந்த நல்ல வாய்ப்பைப் பயன்படுத்தி உடனடியாக அரசும் யுத்தத்தை நிறுத்தி நோர்வே நாட்டின் மத்தியஸ்தத்துடன் புலிகளுடன் பேச்சை ஆரம்பித்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும்.

இதைவிடுத்து புலிகள் பலவீனப்பட்டு விட்டார்கள்; அதன் காரணமாகத்தான் பேச்சுவார்த்தை, போர் நிறுத்தம் என அறிவித்து தங்களைப் பலப்படுத்தப் பார்க்கிறார்கள் என அரசு தவறுதலான கணிப்பீட்டை எடுக்குமானால் நாடு பேரழிவைச் சந்தித்து பெரும் பொருளாதார வீழ்ச்சியையும் கண்டு சுடுகாடாகும் நிலை உருவாகும். இந்நிலைக்கு ஆட்சியாளர்கள்தான் பொறுப்பு.

பிறக்கும் புதுவருடம் சண்டை ஓய்ந்து சகஜ நிலை தோன்றி அழிவின் அந்தகாரம் அகன்று அனைவருக்கும் நன்மை பயக்கும் ஆண்டாக மலர்ந்து, சமாதான ஒளி மிளிர அனைவரும் பிரார்த்திப்போமாக - என்றுள்ளது. (இ-ம-5)

### உரும்பிராயில் விற்பனைநிலையம்

உரும்பிராய் டிசெ.27

நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பல்பொருள் விற்பனை நிலையம் உரும்பிராய்ச் சந்தியில் இப்போது இயங்குகிறது.

## வாசகர் திருமுகம்

### மாட்டின் வீதி திருத்தப்படாதது ஏன்?

யாழ்.மாட்டின் வீதி இன்னமும் திருத்தப்படவில்லை. இது குறித்து எத்தனையோ தடவைகள் இப்பத்தியில் எடுத்துரைத்தும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. காரணம் என்னவென்று தெரியவில்லை?

போக்குவரத்துக் கூடிய இவ்வீதியால் பாதசாரிகளும், வாகனத்தில் செல்பவர்களும் சைக்கிள், மோட்டார் சைக்கிள் முதலானவையும் செல்வதால் இந்த வீதி செப்பனிட வேண்டியது மிக அவசியம். விமான, கப்பல் பயணங்களுக்குச் செல்வோரும் இந்த வீதியைப் பயன்படுத்துதால் இது தற்போது பிரதான பாதையாகியுள்ளது. ஆகவே இந்த வீதி திருத்தப்படுவதால் எத்தனையோ பயணிகள் நன்மையடைவார்கள்.

ஒருமுறை கவனமெடுப்பதாகக் காற்றுவாக்கில் சேதி வந்ததே தவிர நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை, ஏன்தான் இப்படிப் பாராமுகமாக இருக்கின்றார்களோ தெரியவில்லை.

போக்குவரத்துக்கு அதிகமாகப் பயன்படுத்தப்படும் இந்த வீதி நிச்சயம் செப்பனிடப்பட வேண்டும். செய்வார்களா?

*யாழ்ப்பாணம்.* எம்.வி.ராஜா.

### போதிய சேவை வழங்கப்படுமா?

பருத்தித்துறை வீதியால் நடத்தப்படும் வல்வெட்டித்துறையூடான பஸ் சேவை கடந்த சில மாதங்களாக சீர்குலைந்துள்ளது. இது பற்றி பலமுறை யாழ்.அரச அதிபருடனான அபிவிருத்தி சம்பந்தமான கூட்டத்திலும், பருத்தித்துறை பிரிவு பிரதேச செயலருடனான மாதாந்தக் கூட்டங்களிலும், இராணுவ இணைப்பதிகாரியுடனான கலந்துரையாடல்களிலும் முறையிட்டும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் உறுதிமொழிகள் இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

இதேநேரம் ஏனைய பாதையூடாக நடத்தப்படும் பஸ் சேவைகள் மேலும் சீராக்கப்பட்டு 15 நிமிடங்களுக்கு ஒரு பஸ் என்ற ரீதியிலும் இரண்டு மேலதிக பஸ்கள் கடுகதி சேவையிலும் ஈடுபடுத்தப்பட்டு அப்பாதையில் பிரயாணம் செய்பவர்களின் பாராட்டையும் பெற்றுள்ளது.

ஆகவே வல்வெட்டித்துறையூடாகவும் குறைந்தது 45 நிமிடங்களுக்கொருமுறை என்ற அடிப்படையில் பஸ்கள் சேவையில் ஈடுபடுவதன் மூலம் இப்பாதையால் பயணம் செய்பவர்கள் படும் அவலங்களை ஓரளவுக்கேனும் நிவர்த்தி செய்யலாம். இவ்வாறான சேவை எப்போது மீண்டும் நடத்தப்படும் என மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

பளை, தென்மராட்சியில் இருந்து இடம்பெயர்ந்து வந்த பல குடும்பங்கள் பொலிகண்டி, வல்வெட்டித்துறை, வல்வெட்டி, உடுப்பிட்டி ஆகிய பகுதிகளில் தற்சமயம் வாழ்ந்து வருவதாலும் பளை, மருதங்கேணி, பருத்தித்துறை உதவி அரச அதிபர் பணிமனைகள், வங்கிகள் என்பன பருத்தித்துறையிலும், யாழ்ப்பாணத்திலும் அமைந்துள்ளதாலும் இப்பகுதியூடான சேவைகளை அதிகரிக்கவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இப்பாதையூடாக ஒரே ஒரு தனியார் பேருந்துச்சேவை மட்டும் நடைபெறுவதும் குறிப்பிடத்தக்கது. எனவே, அதிகாரிகள் இலாபத்தினை மட்டும் கருத்தில் கொண்டு சேவை ஆற்றாது இப்பகுதி மக்களினதும், இடம்பெயர்ந்து வாழ்பவர்களினதும் நலனிலும் அக்கறை கொண்டு பஸ் சேவையைச் சீர்செய்து தந்துதவுமாறு வேண்டுகின்றோம்.

*வல்வெட்டித்துறை.* - ஒரு பயணி.

# பாதீனியத்தை ஒழிக்க நாடளாவிய ரீதியில் இணைவோம்

**குடாநாட்டில் பரவி வரும் பாதீனியம் களையை அழிக்கும் பாதீனியம் ஒழிப்பு வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதனையொட்டி பிரசுரமான கட்டுரையின் இறுதிப் பாகம் இன்று வெளிவருகிறது.**

*பாதீனியத்தைப் பூக்கவிடாமல் தடுக்கும் பூச்சிகள்:-*

மெக்சிக்கன் நாட்டைச் சேர்ந்த சைக்கோகிராமே பைக்கொலரேட்டா பாதீனியச் செடியைத் தின்றே அழிக்க வல்லன. பூச்சிகள் மழைக் காலத்தில் தாங்கள் இருந்த உறக்க நிலையிலிருந்து வெளியே வந்ததும் பாதீனியத்தை அகோரமாகத் தின்று, இயற்கையின் உந்துதலால் இனப்பெருக்கத்தில் ஈடுபட்டு 2,000 முட்டைகள் வரை பாதீனிய இலையின் அடியில் இடும். முட்டைகளிலிருந்து நாலே நாளில் பொரித்து வெளிவரும் புழுக்கள் பாதீனிய இலையை நன்கு சாப்பிட்டுக் கொழுத்து கூட்டுப்புழுப் பருவம் அடையும். கூட்டுப்புழுக்கள் பூமியுள் புதையுண்டு முழுவளர்ச்சி பெற்ற 6 மி.மீ. நீளமுள்ள வண்டாக வெளிவரும். வண்டுகள் பாதீனியம் இருக்குமிடம் நோக்கிப் பறந்து சென்று முட்டைகளை இட்டு இனம் பெருக்கும். (இவ்வகையில் பூச்சியினைப் பயன்படுத்தும் போது அவை பாதீனியத்தை அன்றி வேறெந்தத் தாவரத்தையும் உண்ணாததாக இருத்தல் வேண்டும். இல்லாவிடில் "ஆப்பு இழுத்த குரங்கின் கதை" போல் இன்னொரு பூச்சி பீடையை நாமாகவே வலிந்து புகுத்தியதாகி விடும். இதற்கான ஆய்வும் உடனடியாக ஆரம்பிக்கப்படல் வேண்டும். (இலங்கையில் முன்னர் கற்றாழையைக் கட்டுப்படுத்த வெள்ளை மாவுப் பூச்சியும், சல்வீனியா என்ற களையைக் கட்டுப்படுத்த வண்டு ஒன்றும் பயன்படுத்தப்பட்டது. முன்னையது ஓரளவிற்கு வெற்றியளித்த போதும் பின்னையது எதிர்பார்த்த அளவிற்கு வெற்றி தரவில்லை.)

பூமிமாதா மீது ஏதாவது ஒரு செடி முளைப்பது இயற்கை. ஆயினும், பாதீனியம் மட்டும் தனித்துவம் வாய்ந்த வெளிநாட்டு விஷக் களைச் செடியாகும். "ஓராண்டு விதை ஏழாண்டு களை" என்பது வேளாண் பழமொழி. இதனையும் விஞ்சியது பாதீனியம். எனவேதான் பாதீனியத்தைக் கட்டுப்படுத்த இயலாது தவிப்பவர் பலர். எதிரிகளின்றி பாரதத்தில் நுழைந்த பாதீனியம் பாரத மெங்கும் பரவி முற்றுகையிட்டுவிட்டது. (அதே போன்றே இலங்கையிலும் வடபகுதியை குறிப்பாக வலிகாமம் பகுதியை முற்றுகையிட்டு விட்டது.) இன்றோ பாதீனியத்தைக் கட்டுப்படுத்த காசியா செரிசெயா, சைக்கோகிராமே போன்ற அயல்நாட்டு எதிரிகளுடன், உள்நாட்டு எதிரிகளும் (தகரை, பொன் ஆவாரை, ஆவாரை, தும்பை, கொழுஞ்சி போன்றவை, உப்பு, சவர்க்காரக் கரைசல், இயற்கையான புல்பூண்டுகள், பாதீனியத்தை ஒழித்துக்கட்டத் துடிக்கும் கைகள் ஒன்று சேரும்போது முதலில் கட்டுப்படுத்தி பின்னர் அறவே ஒழிக்கவும் இயலும் எனக் கண்டுவிட்டோம். பாதீனியம் ஒன்றே நமது எதிரி. மற்றப்படி மழைக்கு இயற்கையாக முளைக்கும் புல் பூண்டுகளை வேருடன் அகற்றாது பாதீனியத்தை ஒழித்துக்கட்டும் வரை விட்டு வைத்திருப்பது நல்லது. இவ்வாறு செய்வதன் மூலம் இயற்கைச் செடிகளே பாதீனியத்தை வெல்ல வழி வகுத்த வல்லவர்களாய் விளங்கலாம். (பராகுவாட் அல்லது கிராமக்சோன் போன்ற களை நாசனிகளை பயன்படுத்தும் போது ஏனைய புல் பூண்டுகளுடன் மருத்துவகுணம் நிறைந்த மூலிகையினங்களும் அழிய வாய்ப்பு உண்டு. களை நாசனி சிபார்சு செய்யும் போது இதனையும் கவனித்தல் நல்லது அல்லவா!)

**பாதீனியம் பாதிப்புக்கு மருந்து**

*அ) இயற்கை மருத்துவம்:-*

அருகம்புல் சாறு, வாழைத்தண்டுச் சாறு போன்ற காரச்சத்து மிக்க இயற்கைச் சாறுகள் வெறும் வயிற்றில் உமிழ்நீரும் சிறிது சிறிதாக சப்பிக் குடிக்க.

*ஆ) அலோபதி: STEROID CREAMS/TABLETS.*

(ANTI HISTAMINE TABLETS) ஒவ்வாமைக்குரிய குளிகைகள் பாதிக்கப்பட்டோர் அலோபதி மருந்துகளை பாதீனியம் முற்றுகையிட்டிருக்கும் ஊர்களிலிருந்து கொண்டு சாப்பிட்டால் பயன்படுவதில்லை என Physicians Update சஞ்சிகையின்1988 மார்ச்/ஏப்ரல் இதழ்களை மேற்கோள் காட்டிக் கூறப்பட்டுள்ளது.

எனவே அவதானம் தேவை.

*"பாதீனியத்தால் பாதிக்கப்பட்டவர்களில் சிலரது சுவாரஸ்யமான கதைகள்:-*

1. 'குங்குமம்' இதழ் 23.7.1986

பாதீனியத்தால் பாதிக்கப்பட்டவர்களுள் (4%) சேலம் அரசு கலைக் கல்லூரியைச் சேர்ந்த பேராசிரியர் பாலசுப்பிரமணியமும் ஒருவர். பாதீனியத்தின் பாதிப்பு ஏற்பட்டதை முதலில் இவர் கவனிக்கவில்லை. ஏதோ சாதாரண அரிப்பாக இருக்கும் என்று நினைத்து இருந்து விட்டார். பின் நாளடைவில் அரிப்புத் தாங்க முடியாமல் பிளேட், கத்தி, சீப்பு, சிரட்டை எல்லாவற்றிற்கும் மேலாக உப்புத் தாளையும் வைத்துத் தேய்க்கும் அளவிற்கு மாறிவிட்டார். பின் உடம்பு முழுவதும் ஒரே ரணமாக மாறி வெளியே செல்லமுடியாத நிலை ஏற்பட்டு தற்கொலைக்குக் கூட துணிந்து விட்டார். பின் செத்தாலும் நம்மை யாரும் தொடமாட்டார்களே என நினைத்து சென்னைக்கு மாற்றலாகி சிகிச்சை பெற்று வந்தார்.

2. 'குமுதம்' சஞ்சிகை 2.9.1984 'பிரார்த்தனை கிளப்'.

பாதீனியம் விஷச் செடி என எனக்குத் தெரியாது. அதன் பூக்கள் என் தலையெல்லாம் விழுந்தது. அடுத்த நாளே முகவீக்கம் கண்டு விட்டது. அதன் பின் தாங்க முடியாத அரிப்பு ஏற்பட்டது. சிறு சிறு கொப்புளங்கள், தடிப்புகள் வந்தன. டாக்டர் அந்தச் செடியிலிருந்து மருந்தைத் தயாரித்து பரிசோதனை செய்து பார்த்து விட்டு அந்தச் செடியின் விஷத் தன்மை பலமாகப் பாதித்து இருப்பதாகச் சொல்லி அந்தச் செடி எங்கிருந்தாலும் அந்த ஊருக்குப் போகக்கூடாது என்று சொல்லி விட்டார்.

*"கற்க கசடறக் கற்பவை கற்ற பின் நிற்க அதற்குத் தக"* எனும் குறளுக்கேற்ப பாதீனியம் பற்றி படித்தறிந்தவற்றை அனைவர்க்கும் பரப்பினேன். "போற்றுவார் போற்றலும், தூற்றுவார் தூற்றலும் போகட்டும் இறைவனுக்கே" என்று கீதை கூறும். "சும்மா நிக்காதீங்க. நோய் வந்து சொல்லும்படி வைக்காதீங்க", "நாடென்ன செய்தது நமக்கு? எனக் கேள்விகள் கேட்பது எதற்கு? நீ என்ன செய்தாய் அதற்கு என நினைத்தால் நன்மை உனக்கு" என்று சினிமாப் பாணியிலும் "வரலாறு படைக்கப்போகும் சாதனை" என்றும், "கேள்விப்பட்ட ஒரு சிறுகதை" என்றும், "உங்கள் வீட்டைச் சுற்றிப் பாதீனியம் இருக்கிறதா"? என்றும் பல படைப்புகள் படைத்தேன். 1989இல் காமராஜர் மாவட்ட ஆட்சியர் பாதீனியக் கட்டுப்பாட்டை மாவட்டத் திட்டமாக ஏற்றார். 1989இல் சென்னை தொலைக் காட்சி அறிவியல் அரங்கத்தில் பாதீனியம் பற்றி 20 நிமிடங்கள் நேரடி ஒளிபரப்புச் செய்தது. இது வரை 15 வானொலி நேர்முக உரையாடல்கள் கொடுத்துள்ளேன். சண் டி.வி. 25.12.94 பூமாலை நிகழ்ச்சியில் பாதீனியம் பற்றி ஒளிபரப்பியது. கடந்த 10 ஆண்டுகளில் இதுபோன்ற என் முயற்சிகள் பலவாகும். (10 ஆண்டுகளாக முற்றுகையிட்ட பாதீனியத்தை அழிக்கப் பட்டபாடு புரிகிறதல்லவா! நாம் என்னசெய்யப் போகிறோம்?)

**கு.மிகுந்தன்**
தலைவர்,
*(விவசாய உயிரியல்துறை,*
*விவசாயபீடம்,*
*யாழ்.பல்கலைக்கழகம்.)*

வேளாண்துறை அமைச்சர் கேட்டதற்கிணங்க பாதீனியத்தை தமிழகம் முழுவதும் 3 ஆண்டுகளில் கட்டுப் படுத்த ஓர் எளிய திட்டம் 16.12.94இல் என்னால் சமர்ப்பிக்கப் பட்டது. (பரவ ஆரம்பித்தது 1956 இல், தனிமனிதனால் திட்டம் தீட்டப் பட்டது 1994இல்) பாதீனியத்தைக் கட்டுப்படுத்தும் இந்த "ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டுத் திட்டத்தில் (Integrated Parthenium Management) என்னுடைய 6 எளிய வழிகளும் உள்ளன. "பாதீனியத்தைக் கட்டுப்படுத்த உங்கள் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள அனைத்து வழி முறைகளும் சிறந்ததெனக் கண்டறியப்பட்டு செயல்படுத்தி வருகிறோம்" என்று கோவை, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்திலிருந்து 9.11.94 இல் கடிதம் வந்தது. 1989இல் நான் வெளியிட்ட 6 எளிய வழிகளையும் 1994இல் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அப்படியே ஒப்புக் கொண்டுள்ளது. (தனிமனிதனொருவரின் ஆய்விற்கு கல்விகற்காத நிலையில் பல்கலைக்கழகம் கொடுத்த கௌரவம் இது எனலாம்! என்ன யோசிக்கிறீர்கள் நீங்களும் முயற்சிக்கலாமே!)

இதன் மூலம் விருதுநகரில் பிறந்த கர்மவீரர் காமராஜர் வெளிநாட்டினரிடம் சுதந்திரம் வாங்கப் பாடுபட்டு வெற்றிபெற்றதுபோல் வெளிநாட்டு விவசாய விஷக்களையை வேரோடு விரட்ட விருதுநகரில் வழி பிறந்து விட்டது! (எமக்கு எப்போது விடிவு காலம்? நாமனைவரும் ஒருமித்துச் சிந்திக்க வேண்டிய விடயம் இது!)

இலங்கையிலும் தென்பகுதியில் இந்த பாதீனியக்களை பரவியுள்ளதாக அறிகிறோம். இந்நாட்டு சூழல் மிகவும் ஏற்றதாக அமைந்து விட்டது இவ்விஷக்களையின் பெருக்கத்திற்கு உந்துசக்தியாக இருக்கிறது!

எனவே நாடளாவிய ரீதியில் இதனை அழித்தொழிக்க இன, மத, சாதி, ஆண், பெண், பேதங்களின்றி ஒற்றுமையாக ஒன்றிணைந்து திட்டங்கள் வகுக்கப்பட்டு "ஒருங்கிணைந்த பாதீனிய முகாமைத்துவம்" நடைமுறைப்படுத்தப்படல்வேண்டும். விவசாயத் திணைக்களம், விவசாய பீடம், விஞ்ஞானபீடம், அரச அதிபர் பணிமனை, விவசாய சம்மேளனங்கள், விவசாயக் கல்லூரி, கல்விச் சாலைகள், மாணவர்கள் பாரபட்சமின்றி ஒவ்வொரு பிரஜையும் இதில் ஒன்றிணைய வேண்டும். இந்தக் கொடிய தாக்கமுடைய விஷக்களைக்கு எதிரான யுத்தத்திற்கு நாடு முழுவதுமே தயாராக வேண்டும். நிச்சயமாக இதில் "சமாதானப் பேச்சுக்கு" இடமில்லை என்ற உங்கள் இறுமாப்பு நியாயமானதே.

(முற்றும்)

உ

# விசேட அபிஷேகம்



**கொடிகாமம்**
**பெரியநாவலடி**
**ஸ்ரீ சிவகாமசுந்தரி**
**அம்பாள் ஆலயத்தில்**

நாட்டில் அமைதி சமாதானம் வேண்டி நாளை மறுதினம் (29-12-2000) வெள்ளிக்கிழமை விஷேட அபிஷேகம் நடைபெறும்.
பூசை நண்பகல் 12.00 மணிக்கு நிகழும்.
அடியார்கள் அனைவரும் கலந்து கொண்டு அம்பாளின் அருளைப் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

- தர்மகர்த்தா.

(82112)

# 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 17 - 01 - 1946

மறைவு 06 - 01 - 1992

**அமரர் வீரகத்தி சிவலிங்கம்**
(உதவி அரசாங்க அதிபர்)

திதி:-27-12-2000

பாசமிகு அன்புத் தந்தையே!
குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்து
எங்களுக்கு நல்வழிகாட்டிய
அன்புத் தெய்வமே!
ஆண்டொன்பது சென்றாலும்
உங்கள் நினைவலைகள்
என்றும் எம்மை விட்டகலாது.


உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும்
இறைவனை பிரார்த்திக்கிறோம்

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

*"ராஜஸ்தான்"*
*கிழவிதோட்டம்,*
*கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.*

(c/14438)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 12 - 10 - 1921

மறைவு 25 - 11 - 2000

**அமரர்**
**வேலுப்பிள்ளை பசுபதி**

நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும்
உங்கள் நினைவு எங்கள் மனதை
விட்டு நீங்காது!
உங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் நினைவால் வாடும்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*கச்சாய்டி,*
*வல்வெட்டி,*
*வல்வெட்டித்துறை.*

(82019)

## வங்கிப் புத்தகம் கையளிப்பு

யாழ்ப்பாணம், டி...

யாழ்.பல்கலைக்கழக வவுனியா மாவட்ட மாணவர் ஒன்றியத்தினரால் காணாமல் போன குடும்பங்களைச் சேர்ந்த பத்துச் சிறுவர்களுக்கு கைலாசபதி கலையரங்கில் வைத்து வங்கிப் புத்தகங்கள் கையளிக்கப் பட்டன.

(இ-6-10)

NIRU TUTION CENTRE
KONDAVIL
A/L 2001
PHYSICAL CHEMISTRY
START: 28-12-2K
N.MAKESHWARAN
(82107)

BITSMANS
கல்வி நிறுவனம்
மானிப்பாய்
SPOKEN ENGLISH WITH GRAMMAR
By.M.A.HARY
ஆரம்பம்:- 28.12.2000
வியாழன் 10.00 a.m.
(82111)

# யுத்த நிறுத்தத்தை ஏற்குமாறு இலங்கை அரசை வற்புறுத்துக!

## மத்திய அரசிடம் நெடுமாறன் கோரிக்கை

சென்னை,டிசெ.27

விடுதலைப் புலிகள் விடுத்துள்ள யுத்த நிறுத்த அறிவிப்பை ஏற்று சமாதானப் பேச்சுக்களில் ஈடுபட இலங்கை அரசை இந்தியா வற்புறுத்த வேண்டும். அதற்கும் சந்திரிகா அரசு மறுக்குமானால் இந்தப் பிரச்சினையை ஐ.நா.சபைக்குக் கொண்டு செல்ல இந்திய அரசு முன் வரவேண்டும்.

மேற்கண்டவாறு தமிழ்நாடு தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் இந்திய அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று முன் தினம் அவர் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

விடுதலைப்புலிகள் வெற்றி மேல் வெற்றி பெற்று வரும் இவ்வேளையில் பிரபாகரன் தானாகவே முன்வந்து யுத்த நிறுத்தத்தை அறிவித்துள்ளார். இதற்கு உலக நாடுகளில் பெரும வரவேற்புக் கிடைத்துள்ளது. ஆனால சிங்கள அரசு மட்டும் யுத்த நிறுத்தத்தை நிராகரித்துள்ளது. இதன் மூலம் போர் வெறியர்கள் யார் என்பது அம்பலமாகியுள்ளது.

விடுதலைப்புலிகள் விடுத்துள்ள யுத்த நிறுத்த அறிவிப்பை ஏற்று சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு இலங்கை அரசை வற்புறுத்த வேண்டிய கடமை இந்தியாவுக்கு உண்டு.

சந்திரிகா அரசு இந்த யுத்த நிறுத்தத்தை நிராகரித்தால் இந்தப் பிரச்சினையை ஐ.நா.சபையில் எழுப்ப வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

(ஐ-8)

## கடற்படைக்கு புதிய தளபதி

கொழும்பு,டிசெ.27

புதிய கடற்படைத் தளபதியாக றியர் அட்மிரல் தயா சந்தகிரி. அடுத்த வாரம் பதவியேற்க விருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போதைய கடற்படைத் தளபதியான வைஸ் அட்மிரல் சிசில் திஸேரா தமது நான்கு சேவை நீடிப்புக் காலத்தைப் பூர்த்திசெய்த பின் ஓய்வு பெற்றுச் செல்கின்றார்.

இதைத் தொடர்ந்து அடுத்த நிலையில் பிரதம நிர்வாக அதிகாரியாகப் பணிபுரியும் றியர் அட்மிரல் தயா சந்தகிரி புதிய தளபதியாகப் பதவியேற்றார்.

(ஐ-3)

உ
சிவமயம்

# பூப்புனித நீராட்டு விழா அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் மார்கழி மாதம் 13ஆம் நாள் (28.12.2000) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிமுதல் 12 மணி 30 நிமிடம் வரையுள்ள திருவோண நட்சத்திர சுபமுகூர்த்த வேளையில்,

**எமது புதல்வி திருநிறைசெல்வி**

**சாளினி** அவர்களுக்கு

இறைவன் திருவருள் துணையுடன் பூப்புனித நீராட்டு விழா நடத்த பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து செல்வியை ஆசீர்வதித்து வைபவத்தைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**சரஸ்வதி**
*36/1, நாவலர் வீதி,*
*(மனோ ஸ்ரூடியோ முன் ஒழுங்கை) யாழ்ப்பாணம்.*
கலைவாணி நகை மாளிகை (முகாமையாளர்)

தங்கள் நல்வரவை நாடும்
**திரு.சோ.நாகநாசாவும்,**
**பாரியார் தவமலரும்.** (82125)

HARVEST
ஹாவஸ்ட்
புதுச்சுவை குன்றாத தேநீர்

மலையகத்தின்
பசுமையான
தோட்டங்களிலிருந்து
வரும் ஹாவஸ்ட்
தேயிலை.....




நறுமணமும்
புத்துணர்வும்
தந்திடும் தேநீரை
நீங்கள் பருக
நுட்பமாகக் கலவை
செய்யப்பட்டுள்ளது.

100 கிறாம் பக்கெட்டுகளில் கிடைக்கும்

Marketed by
*BURNS*
*PHILP LANKA (PVT) LTD.*
124, Templers Road, Mt.Lavinia.

*JEYARASA & COMPANY*
104.A, Stanley Road, Jaffna.

(சி14342)

பொதுசன நூலகம்

# சுய நலன்களுக்காக ஒருபோதும் அரசாங்கத்துடன் சேரமாட்டேன்

## விநாயகமூர்த்தி எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.27

சுயநலன்களுக்காக அரசாங்கத்துடன் இணைந்தோ சேர்ந்தோ ஒருபோதும் செயற்படமாட்டேன்.

இவ்வாறு தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி அப்பாத்துரை விநாயகமூர்த்தி தெரிவித்தார்.

தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் ஆதரவாளர்க்ள் அடங்கிய கூட்டம் ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆனைக்கோட்டையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

தமிழ் மக்களின் உரிமைக்காகவும் இலட்சியத்துக்காகவும்பாடுபட்ட எமது தலைவர் மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் அடிச்சுவட்டினைப் பின்பற்றி தமிழர்களுக்காக என்றும் குரல் கொடுப்பேன்.

எந்தக் கட்டத்திலும் நான் அரசுடன் சேரப்போவதில்லை. தமிழர்களின் உரிமைகளுக்காக நாடாளுமன்றத்தில் குரல் கொடுப்பேன்.

குடாநாட்டு மக்களின் பிரச்சினைகளை அறிந்துகொள்வதற்காக மாதந் தோறும் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளேன்.

இப்படி அவர் மேலும் கூறினார். (ம-5-173)

# வரணியில் காய்ச்சல் பரவுகிறது

தென்மராட்சி,டிசெ.27

வரணிப் பகுதியில் காய்ச்சலால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

தினமும் 50க்கு மேற்பட்டோர் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நிலையில் வரணி ஆஸ்பத்திரி வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

காய்ச்சலால் பீடிக்கப்பட்டு சிகிச்சை பெற வருவோருக்கு மலேரியா இரத்தப் பரிசோதனை செய்யப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுவதாகவும் கூறப்பட்டது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் வரணி ஆஸ்பத்திரி மட்டுமே தற்போது இயங்குவதால் சாவகச்சேரி, பளை, மிருசுவில், கைதடி ஆகிய ஆஸ்பத்திரிகளில் கடமையாற்றிய ஊழியர்கள் சிலர் இங்கு கடமையாற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது. (ம-117)

# மறுசீரமைக்கப்பட்ட பாடசாலைகளின் குறைபாடுகள் தீர்க்கப்பட வேண்டும்

## கல்விப் பணிப்பாளருக்கு மகஜர்

புதிய கல்விச் சீரமைப்பின் கீழ் யாழ்.கல்வி வலயத்தில் மறுசீரமைக்கப்பட்டுள்ள சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலயம், சென்.ஜேம்ஸ் மகளிர் வித்தியாலயம் ஆகியவற்றில் காணப்படும் குறைபாடுகளைக் களைந்து எதிர்வரும் 2001ஆம் ஆண்டில் இப்பாடசாலைகள் நல்ல முறையில் இயங்க அவசர நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

இவ்வாறு கோரும் மகஜர் ஒன்றை குருநகர் அபிவிருத்திச் சங்கம் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கத்துக்கு அண்மையில் அனுப்பி வைத்துள்ளது.

சென்.ஜேம்ஸ் மகளிர் வித்தியாலய உயர் பாடசாலைத் தளபாட வசதி, நூலக வசதி, விஞ்ஞான கூடம், மனையியல் கூடம் ஆகியன இல்லாமல் பெயரளவில் இயங்கி வருகின்றன.

ஆரம்ப பாடசாலையாக இயங்கி வரும் சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தில் திறமை மிக்க அதிபரும், பொருத்தமான ஆசிரியர்களும் இல்லாது உள்ளது.

மறுசீரமைக்கப்பட்டதன் பின்னரும் இவ்விரு பாடசாலைகளின் பெயர்களும் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

இக்குறைபாடுகளை நீக்கி உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் - இப்படி அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளன. (ம-51)

### சைக்கிள் திருட முயன்றவர் பிடிபட்டார்

ஏற்கனவே இடம்பெற்ற சைக்கிள் திருட்டுச் சம்பவம் தொடர்பாக, நீதிமன்ற வழக்கு விசாரணையில் பிரசன்னமாகாது, நீதிமன்றினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த வயோதிபர் ஒருவர் மேலும் இரு சைக்கிள்களைத் திருட முற்பட்ட போது மந்திகை மருத்துவமனைக்கு முன்பாக வைத்து வர்த்தகர்களினால் மடக்கிப் பிடிக்கப்பட்டார். (ம-180)

# மின்பாவனையாளர்களிடம் கூடுதல் கட்டணம் அறவிடுவது முறையற்றது

## வல்வை நகரசபைத் தலைவர் கடிதம்

யாழ்ப்பாணம்,டிசெ.27

பொதுமக்கள் பயன்படுத்தும் மின் அலகுகளுக்கான கட்டணத்திலும் பார்க்கக் கூடுதலான கட்டணத்தை அவர்களிடம் அறிவிடுவது முறையற்ற செயலாகும்.

வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் எம்.சிவாஜிலிங்கம் மின்சாரசபை பிரதிப் பொதுமுகாமையாளருக்கு எழுதியுள்ள கடிதத்தில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வல்வெட்டித்துறை எல்லைக்குள் வசிக்கும் மின் பாவனையாளர்கள் மட்டுமல்லாது யாழ்.குடாநாட்டின் பல பகுதிகளிலும் வாழும் மின் பாவனையாளர்களும் தங்கள் வீடுகளுக்கு நீண்ட காலமாக மின்மானி பொருத்தப்படாமல் இருப்பதாக முறைப்பாடு செய்கின்றனர்.

இந்த விடயம் குறித்து யாழ். செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் நான் எடுத்துக் கூறினேன்.

நாட்டின் இன்றைய நிலையில் பொதுமக்கள் தாங்க முடியாத துன்பங்களையும், நிதி நெருக்கடிகளையும் எதிர்கொண்டு வருகின்றனர்.

எனவே வல்வெட்டித்துறை மக்களுக்கு மட்டுமன்றி யாழ்.குடாநாட்டிலுள்ள சகல மின் பாவனையாளர்களுக்கும் மின்மானி பொருத்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன் - என்றுள்ளது.

கடிதத்தின் பிரதிகள் யாழ்.அரச அதிபர், மின்சாரசபை மின் பொறியியலாளர், நெல்லியடி மின் அத்தியட்சகர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ம-5)

# பாதீனியம் ஒழிப்புத் தீவிரம்!

மானிப்பாய்,டிசெ.27

உடுவில் கமநல கேந்திர நிலையம் ஒருவார கால பாதீனியம் ஒழிப்பு நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

உரும்பிராய் மூன்று கோயிலடியில் சிரமதான முறையில் கடந்த 22 ஆம் திகதி இந்தப் பணி ஆரம்பிக்கப்பட்டது.

பாதீனியம் ஒழிப்பு நிகழ்வை உதவி ஆணையாளர் க.சுந்தரேசன், விவசாயப் பணிப்பாளர் ச.சின்னத்துரை, விவசாயப் போதனாசிரியை திருமதி ஜெயலட்சுமி சிவசுப்பிரமணியம் ஆகியோர் காலை 9 மணிக்கு ஆரம்பித்து வைத்தனர்.

உடுவில் பெரும்பாக உத்தியோகத்தர் பொன்.குகநாதன் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட பாதீனியம் ஒழிப்பு வாரத்தில் 24 விவசாய சம்மேளனங்களும் கலந்து கொண்டன.

29 ஆம் திகதி வரையான ஒரு வார கால பாதீனிய ஒழிப்பு நிகழ்வின் போது மருதனார்மடம் உட்பட அநேக சந்திகளில் இக்கொடிய நச்சுச் செடிகள் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

வளரும் பிரயோசனப் பயிர்களையும் விலங்குகளையும் மனிதர்களையும் இக்களை வெகுவாகப் பாதிக்கும் ஆதலால் ஒழிப்பு வாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இணுவில், சுன்னாகம், ஈவினை, புன்னாலைக்கட்டுவன், உடுவில், ஏழாலைப் பகுதிகளில் முற்றாக இக்களையை அழித்தொழிப்பதை நோக்கமாகக் கொண்டு இப்பாதீனிய ஒழிப்பு வாரம் அனுஷ்டிக்கப் படுகிறது. (இ-90)

# போரில் வெற்றி பெறுவதே அரசாங்கத்தின் குறிக்கோள்

## ரத்வத்த கூறுகிறார்

கொழும்பு,டிசெ.27

விடுதலைப் புலிகள் விடுத்த யுத்த நிறுத்த அறிவிப்பு மூலம் அவர்கள் சர்வதேச ரீதியான பிரசாரப் போரில் வெற்றி பெறலாம். ஆனால் அதனை விட உள்நாட்டுப் போரில் வெற்றி பெறுவதே அரசாங்கத்தின் குறிக்கோள்.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த இவ்வாறு தெரிவித்துள்ளார்.

புலிகளின் யுத்தநிறுத்த அறிவிப்பை அரசு நிராகரித்தது தொடர்பாக செய்தியாளர்களிடம் விளக்கமளிக்கையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

இலங்கை விவகாரத்தில் சர்வதேச சமூகத்தின் அக்கறை குறித்து நாம் மதிப்பளிக்கிறோம். ஆனால் சர்வதேச அழுத்தம் நம்மீது உள்ளது என்பதை நாம் மறுக்கிறோம். என்று அமைச்சர் மேலும் கூறினார்.

இதேவேளை -

பி.பி.ஸியின் கொழும்புச் செய்தியாளர் "அரசு பிரசாரப் போரில் மட்டுமல்ல களப்போரில் வெல்வது கூடச் சாத்தியமாகாது என்றே தெரிகிறது" என்று தெரிவித்துள்ளார். (ம-8)

### மின்சாரம் வழங்க நடவடிக்கை இல்லை

வலி.தென்மேற்கு,டிசெ.27

நவாலி வடக்கு நாச்சியார் ஆலயப் பகுதிக்கு மின்சாரம் வழங்கக் கோரி பல மகஜர்கள் கையளிக்கப்பட்ட போதிலும் இதுவரை மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நவாலி வடக்கு புலவர் வீதிக்கும் முழுமையாக மின்சாரம் வழங்கப்படவில்லை. (இ-185)

### உப தபாலகம்

கொழும்புத்துறை,டிசெ.27

மீசாலை உபதபால் அலுவலகம் பருத்தித்துறை புற்றளையில் இயங்கி வருகின்றது. (இ-30)

### கானான் ஜெப ஆலய ஒளிவிழா நிகழ்வுகள்

இருபாலை, கானான் ஜெப ஆலயத்தின் ஒளிவிழா நிகழ்வுகள் நாளை 28ஆம் திகதி தொடக்கம் ஜனவரி 3 ஆம் திகதிவரை நடைபெற உள்ளன.

28ஆம் திகதி கல்லூரி வீதி வட்டுக்கோட்டையிலும், 29ஆம் திகதி அச்சுவேலி வடக்கு அந்தோனியார் கோயில் முன் ஒழுங்கையிலும், 30ஆம் 31ஆம் திகதிகளில் இருபாலை கானான் ஜெப ஆலயத்திலும், முதலாம் திகதி யாழ்ப்பாணம், கச்சேரி - நல்லூர் வீதியிலும், 2ஆம் திகதி தெல்லிப்பழை வடிவாவத்தையிலும்; 3ஆம் திகதி உடுவில் நாகம்மாள் கோயில் வீதியிலும் இடம் பெறும்.

ஒளிவிழா நிகழ்வுகள் பிற்பகல் 3.00 மணிக்கு ஆரம்பமாகும். (இ)

# நான்கு கோரிக்கைகளை முன் வைத்து நல்லூர் கூ.ச. ஊழியர்கள் போராட்டம்

அரியாலை,டிசெ.27

நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் நான்கு கோரிக்கைகளை முன்வைத்து தங்களது இந்த மாதத்துக்குரிய சம்பளக் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ளாது போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

✪ மீளாய்வு செய்யப்பட்ட புதிய சம்பளக் கொடுப்பனவுகளை உடன் வழங்க வேண்டும்.

✪ 1998 ஆம் ஆண்டுக்குரிய 12.5 வீத ஊக்குவிப்புப் படி வழங்கப்பட வேண்டும்.

✪ இடைக்காலப் படி 400 ரூபா நிலுவையுடன் உடன் வழங்கப்பட வேண்டும்.

✪ இந்த ஆண்டில் பகிரங்க விடுமுறை மற்றும் சனி,ஞாயிறு விடுமுறை நாள்களில் பணியாற்றியமைக்குரிய கொடுப்பனவுகளை வழங்க வேண்டும்.

ஆகிய நான்கு கோரிக்கைகளை முன்வைத்தே இந்தப் போராட்டம் இடம்பெற்று வருகின்றது.

இந்தக் கோரிக்கைகள் தொடர்பாக ஒன்றரை மாதத்துக்கு முன்னரே சங்க நிர்வாகத்துக்கு முன்னறிவித்தல் வழங்கப்பட்டிருந்தது.

எனினும் இதற்குரிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளாததை அடுத்து சங்கப்பணியாளர்கள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருவதாக சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தப் போராட்டத்தினால் சங்கத்தின் அத்தியாவசியப் பணிகள் எதுவும் பாதிக்கப்படவில்லை என்றும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ம-17)

### மின்சாரம் இல்லை; வீதிகளில் லாம்பு

வலி.தென்மேற்கு,டிசெ.27

வலி.தென்மேற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கட்டுடை டச்சு வீதிக்கு மின்வழங்காததுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்த ஊர் மக்களால் இரவு வேளைகளில் வீதி மின்கம்பங்களில் "லாம்பு" கொளுத்தி வைக்கும் வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நவாலியில் இருந்து ஆரம்பித்து கட்டுடை வைரவர் வீதி வழியாக பிட்டிலி வீதிக்குச் செல்லும் இடங்களிலேயே லாம்பு கட்டி தொங்க விடப்பட்டு வருகிறது. (இ-185)

### வினைத்திறன்காண் தடைப் பரீட்சை

யாழ்ப்பாணம்,டிசெ.27

மாகாண பொதுச் சேவையின் எழுதுநர் சேவை மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பிற சேவைகளில் உள்ளவர்களுக்கான 2000ஆம் ஆண்டுக்கான வினைத்திறன் காண் தடைப் பரீட்சை எதிர்வரும் பெப்ரவரி மாதம் பரீட்சை ஆணையாளரினால் நடத்தப்படவுள்ளது.

மேற்படி பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் விண்ணப்பப் படிவங்களை 2 பிரதிகளில் தயாரித்து தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாக வடக்கு கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர்களுக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மாதிரி விண்ணப்பப் படிவங்களை யாழ்ப்பாணத்தில் உள்ள வடக்கு கிழக்கு மாகாண பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் பார்வையிடலாம்.

மாகாண பொதுச் சேவையின் எழுதுநர் சேவையுடன் பண்டகசாலை காப்பாளர், சிறாப்பர், கணக்குப் பதிவுநர், தட்டெழுத்தாளர் போன்ற சேவைகளுக்கான வகுப்பு II பிரிவு 'அ'விலுள்ள உத்தியோகத்தர்களுக்கே இந்த வினைத்திறன்காண் பரீட்சை நடைபெறவுள்ளது. (ம-5)

### ஜீ.ஜீ.யின் உருவப்படம் திரைநீக்கம்

யாழ்ப்பாணம்,டிசெ.27

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நிறுவனத் தலைவர்களில் ஒருவரான சட்டமேதை அமரர் ஜீ.ஜீ .பொன்னம்பலத்தின் திருவுருவப் படம் யாழ்.நகரிலுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைச் செயலகத்தில் அண்மையில் திரை நீக்கம் செய்து வைக்கப்பட்டது.

யாழ்.மாநகரசபை உறுப்பினர் செல்லையா விஜயரட்ணம் திருவுருவப்படத்தைத் திரை நீக்கம் செய்து வைத்தார். (ம-5)

### வாராந்த நிகழ்வு

கொழும்புத்துறை,டிசெ27

தொண்டமனாறு சந்நியான் ஆச்சிரம சைவ, கலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் வாராந்த நிகழ்வுகளில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் "ஞானச்சுடர்" மாத நூல் வெளியீட்டு நிகழ்வு பேரவையின் தலைவர் தொழிலதிபர் சி.நாகலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வுக்கான வெளியீட்டுரையை சிவஸ்ரீ கு.தியாகராஜசர்மா (நீர்வைமணி) நிகழ்த்துவார்.

நூலின் மதிப்புரையை யாழ். ஸ்ரான்லிக் கல்லூரி ஆசிரியர் மதுர கவி காரை அருளானந்தம் நிகழ்த்துவார். (ம-30)

### கூட்டம்

வலி.வடக்கு,டிசெ.27

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு தலைவர் ச.தனபாலசிங்கம் தலைமையில் காசிப்பிள்ளையார் கோயிலுக்கு அருகில் உள்ள இல்ல மண்டபத்தில் நடைபெறவுள்ளது (ம-86)

### டெங்குக் காய்ச்சல் ஒழிப்பு நடவடிக்கைகள்

வலிகாமம் தெற்கு,டிசெ.27

உடுவில் பகுதி பொதுச்சுகாதார பரிசோதகரால் இப்பகுதியில் உள்ள பல இடங்களில் டெங்குக் காய்ச்சல் பரவாதிருக்கும் முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சனசமூக நிலையங்கள், பொது அமைப்புக்கள் மற்றும் பொது மக்களின் உதவியுடன் சிரமதான அடிப்படையில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சங்குவேலி தெற்கில் உள்ள அம்மன் கோயிலடிப் பகுதியில் வீடு வீடாகச் சென்று நீர் தேங்கிநிற்கும் பொருள்களை அப்புறப்படுத்தியும், நுளம்புகள் குடியிராதவாறு பற்றைகள், செடிகளை அகற்றியும் சிரமதானம் செய்யப்பட்டது.

இப்பகுதியில் மலேரியா நோயினைக் கட்டுப்படுத்தும் வகையில் 38 குடும்பங்களுக்கு நுளம்பு வலைகள் சுகாதார பரிசோதகரால் வழங்கப்பட்டும் உள்ளன.

இன்று புதன்கிழமை உடுவில் ஆலடிப் பகுதியிலும் -

ஜனவரி ஆறாம் திகதி தாவடி புளிதிட்டிப் பகுதியிலும் -

டெங்கு ஒழிப்பு சிரமதானப் பணிகள் மேற்கொள்ளத திட்டமிடப் பட்டுள்ளன. (ம-152)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### புறோயிலர் கோழி விற்பனைக்கு

கொழும்பிலிருந்து விமானம் மூலம் தருவிக்கப்பட்ட சுத்தம் செய்த புறோயிலர் இறைச்சிக் கோழி தினமும் பெற்றுக்கொள்ள லாம். தொடர்பு T.கரன், ஆஸ்பத்திரி வீதி, கஸ்தூரியார் வீதிச் சந்திக் கடை, யாழ்ப்பாணம். (81880)

### இறைச்சிக்கோழி

சேவல், கல்பேட்ஸ் தினமும் இல வசமாகச் சுத்தம் செய்து பெற்றுக் கொள்ளலாம். லவ்பேட்ஸ் (பச்சை, நீலம்) விற்பனைக்குண்டு. 31, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னா கம் (கண்ணா வீடியோ சென்ரர் வளவு). (81827)

இறைச்சிக்கோழிகள் சுத்தம் செய்து தினமும் பெற்றுக் கொள்ள லாம். 19, முருகேசர் ஒழுங்கை, (நல் லூர் வீடியோ சென்ரர் வளவு) முத் திரைச் சந்தியடி, நல்லூர். (82130)

### விற்பனைக்கு

நல்ல நிலையில் ஒரு கைப்பாவிப் பிலுள்ள **KB100**(கறுப்பு) மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்கு உண்டு. **S.** கணேஸ் கலட்டி, சங்கு வேலி, மானிப்பாய் **or** உதயனமெக் கானிக் ஆரியகுளம் சந்தி, யாழ்ப் பாணம். (82011)

### தவறிவிட்டது

இல.100, மின்சாரநிலைய வீதி, திருகோணமலை என்னும் முகவரி யுடைய வேலுப்பிள்ளை மார்க்கண்டு என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.371192271X) நாவற் குழி முகவரியுடைய விசேட அடை யாள அட்டை (இல.091000320) என் பன 24-12-2000 அன்று யாழ்ப்பா ணத்தில் தவறிவிட்டன. கண்டெடுத் தவர்கள் நல்லூரில் உள்ள சீவ் கொமினிக்கேசனில் ஒப்படைத்து உதவவும். தொலைபேசி இல. 021-2539 (82099)

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த முரு கேசு யோகராஜா என்பவருடைய விசேட அடையாள அட்டை(இல.090 2034422) 19-12-2000 அன்று மானிப் பாய்க்கும் ஆனைக்கோட்டைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத் தவர்கள் தயவுசெய்து **199/5** கில்ட்னர் லேன், கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப் படைக்கவும். (82109)

சண்டிலிப்பாய்க்கும் சங்கானைக் கும் இடையில் வங்கிப் புத்தகம், குடும்ப அட்டை, ஒரு தொகைப் பணம் என்பன தவறிவிட்டன. கண் டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க் காணும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். சுதா வெதுப்பகம், பெரியவிளான்.

**(C/14464)**

பாலையூரைச் சேர்ந்த அன்ரனி (தருமன்) ஜின்சி என்பவருடைய விசேட அடையாள அட்டை, பாட சாலைஅடையாள அட்டை என்பன குருநகருக்கும் மானிப்பாய்க்கும் இடையில் 20-12-2000 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மானிப்பாய் சாயி முகாமில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (82138)

**30/2,** 3ஆம் குறுக்குத் தெரு, பாலையூர் என்னும் முகவரியைச் சேர்ந்த தேவதாஸ் வலன்ரீனா என்ப வரது விசேட அடையாள அட்டை 23-12-2000 அன்று யாழ்நகரில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து லிங்கன் கூல்பார், கஸ்தூரி யார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (82134)

வடமராட்சியில்.....
பொருளியல் கல்வியை
மேம்படுத்த வருகிறார்

**S.வரதராஜன்**

**DAY CLASS**
**ஆரம்பம்: 1-1-2001**
முற்பகல் 9–12வரை.

**கிறிஸ்ரல் சென்ரர்,**
நெல்லியடி.
(82139)

---

**A/L 2003**
கலை, வர்த்தக, கணித, உயிரியல் பிரிவுகள்
ஆரம்பம்: இன்று காலை 9 மணி (27-12-2K)
**THIGAL**
K.K.S. *வீதி, இணுவில்.*
(C/14471)

---

**BEACON**
வதிரி - கரவெட்டி
**2003 A/L**
**கணித, உயிரியல் பிரிவுகள்**
**ஆரம்பம் :**
நாளை 28.12.2000
(வியாழன்) 8.00மணி.
(82147)

---

# வலி. வடக்கு மக்கள் சொந்த இடங்களில் குடியமருவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும்

## தமிழ்க்கட்சி எம்.பிக்களிடம் கூத்தியவத்தை கிராம அ.ச.கோரிக்கை

யாழ்ப்பாணம்.டிசெ.27

வலி.வடக்கு மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியேற அனும திக்கப்பட வேண்டும் அல்லது அதற்கு மாற்றீடாக விசேட ஏற்பாடுகளைச் செய்துதரவேண்டும்.

மேற்கண்டவாறு பளை கூத்திய வத்தை கிராம அபிவிருத்திச் சங்கம் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களி டம் கோரிக்கை விடுத்துள்ளது.

பளை கூத்தியவத்தை கிராம அபிவிருத்திச் சங்கமும், பளை கூத் தியவத்தை சனசமூகநிலையமும் வலி.வடக்கு மக்களின் அவல நிலை என்ற தலைப்பில் தமிழ்க்கட்சி களின் நாடாளுமன்ற உறுப்பினர் களுக்கு விடுத்துள்ள கோரிக்கை யில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ள தாவது:-

இந்த நாட்டில் வன்செயல்களும், இராணுவ நடவடிக்கைகளும் ஆரம் பித்த காலத்திலிருந்து பல்வேறு பட்ட துன்ப துயரங்களுக்கு ஆளான மக்கள் வலி.வடக்கு மக்களே. யாழ். குடாநாட்டில் வேறு எந்தப்பகுதி மக் களும் அனுபவித்திராத கஷ்டமும், பொருள் இழப்பும, இருப்பிட இழப்பும், விவசாய, மீன்பிடி, கைத்தொழில் இழப்பும் இந்தப்பகுதி மக்களையே பெரிதும் பாதித்தது. அத்துடன் இன்றுவரை அதே நிலைமையே இருந்து வருகிறது. இந்தப்பகுதி மக்க ளுக்கு விமோசனம் கிடைக்குமா என்பது இன்னும் கேள்விக்குறியா கவே இருந்துவருகிறது.

ஏனைய மக்களுக்கு வழங்கப்ப டுவது போன்று உலர் உணவு நிவா ரணத்தை மட்டும் இம்மக்களுக்கு வழங்கினால் போதாது. அவர்கள் தமது வாழ்க்கையைக் கொண்டு நடத்த மாதாந்தம் உதவிப்பணம் வழங்கப்படவேண்டும்.

இடம் பெயர்ந்து இரவல் வீடுக ளிலும் இரவல் காணிகளிலும் குடியி ருக்கும் இம்மக்களுக்கு மாதாந்தம் வாடகை செலுத்த நிதி வழங்க வேண்டும்

தமது சொந்த இடங்களை-குடி யிருப்புக்களை - ஒருமுறையாவது போய்ப்பார்த்து வந்து ஆறுதல் அடைய கிராமசேவகர் பிரிவு ரீதி யாக ஏற்பாடு செய்து தரவேண்டும்.

தற்சமயம் மாதாந்தம் 1500 க்கு குறைந்தவர்களுக்கே **உலர்உணவு** நிவாரணம் கடந்த பத்து வருடங்க ளாக **வழங்கப்பட்டு வருகிறது.** ஆனால் வாழ்க்கைச் செலவு அதிக ரிக்கப்பட்டு பாவனைப் பொருள் விலை அதிகரித்துள்ள நிலையில் அரச ஊழியர்களுக்கு சம்பள அதி கரிப்புப் போன்ற சலுகைகள் அளிக் கப்படும் போது இந்த நிவாரண எல்லை மட்டும் பத்து வருடங்களாக தொடர்ந்து ஒரே மாதிரி இருந்து வருகிறது. ஆகவே உலர்உணவு நிவாரண எல்லையை **மாதாந்தம** 10 **ஆயிரம் ரூபாவாக அதிகரிக்க** வேண்டும் எனக் கோருகிறோம்.

தற்போது வழங்கப்படும் உலர் உணவு நிவாரண விகிதம் **பத்து** வருடங்களுக்கு முன் நிர்ணயிக்கப் பட்டது. அது தற்போது போதுமான தாக இல்லை. பொருள்களின் விலை அதிகரிப்பால் குறிப்பிட்ட தொகைக்கு குறைந்த பொருள்களே கிடைக்கின் றன. ஆகவே நிவாரண விகிதத்தை மறுபரிசீலனை செய்து அதிகரிக்க ஆவன செய்ய வேண்டும்.

இப்படிக் கோரப்பட்டுள்ளது.

(இ)

---

# நன்றி நவில்கின்றோம்

பிறப்பு ஈழமண்ணில் 10 - 09 - 1939



இறப்பு தமிழகத்தில் 27 - 11 - 2000

**அமரர் ஆறுமுகம் சண்முகநாதன்**

(ஓய்வு பெற்ற உத்தியோகத்தர் - மக்கள் வங்கி )

எமது அன்புத் தெய்வம் சென்னையில் அமரத்துவ மடைந்த செய்தியைக் கேள்வியுற்று 30.11.2000 அன்று சென்னையில் நடைபெற்ற இறுதிக் கிரியைகளில் நேரடியாகக் கலந்து கொண்டோருக்கும் தாவடியில் உள்ள எமது இல்லத் திற்கு நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தோருக்கும் பத்தி ரிகை மூலம் அஞ்சலிச்செய்தி வெளியிட்ட பொது ஸ்தாபனம் மற்றும் தனியாருக்கும், கடிதம், தந்தி, தொலைபேசி மூலம் சென்னையில் உள்ள அவரது மனைவி, பிள்ளைகளுக்கும் எமக்கும் அனுதாபம் தெரிவித்தோருக்கும், அவர் நோயுற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வேளை அவருக்கு சிகிச்சை அளித்த வைத்திய நிபுணர் களுக்கும் மற்றும் உத்தியோகத்தர்களுக்கும் எமது உள் ளம் நெகிழ்ந்த நன்றியை நவில்கின்றோம்.

திருமதி கமலம் கதிர்காமநாதன
(மருமகள்)
தாவடி.

*திருமதி மகேந்திரதேவி சண்முகநாதனும்*
*பிள்ளைகளும்* (சென்னை)
*திரு.ஆ.தேவராசா* (சகோதரர்)

(82137)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 1932 - 04 - 14



உதிர்வு 2000 - 11 - 28

**அமரர் கணபதிப்பிள்ளை வேலாயுதம்**

(இளைப்பாறிய உப தபால் அதிபர்)

அன்பும் பண்பும் உள்ள அன்புத் தெய்வமே!
மாதம் ஒன்று ஓடி மறைந்தாலும்
ஐயா, உங்கள் நினைவுகள்
எம் நெஞ்சத்தை விட்டு நீங்காது!

நாளை (28-12-2000) வியாழக்கிழமை காலை 7.30 மணி யளவில் நடைபெறும் அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ் விலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனை வரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*வீரப்பதிராஜன்,*
*கரணவாய் தெற்கு,*
*கரவெட்டி.*

**- குடும்பத்தினர்.**

(82094)

---

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திரு.சின்னத்துரை பாலசுந்தரம்**

அவர்கள் கிளிநொச்சி மாவட்டத்தில் பளைப் பிரதேச செயலர் பிரிவில் கிராம சேவை அலுவலர் தரம் I க்குப் பதவி உயர்வு பெற்றுள்ளதனையும் பளை நகர கிராமசேவகர் பிரிவினைப் பொறுப்பேற்றமையையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**பெரிய பளை**
**கிராம அபிவிருத்திச் சங்கம் - பளை,**
**ஸ்ரீ சக்தி கல்வி நிலையம் - பளை.**
(82144)

---

உ
சிவமயம்

# காரைநகர் சிவன் கோயில்

**(ஈழத்துச் சிதம்பரம்)**

## திருவாதிரை உற்சவம்

சிவநேயர்களே!

நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் மார்கழி மாதம் 16ஆம் நாள் (31-12-2000) ஞாயிற்றுக்கிழமை திருவெம்பாவை உற்சவம் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் சிறப்பாக நடைபெற திருவருள் பாலித் துள்ளது. அத்தருணம் சிவநேயர்கள் அனைவரும் ஆசார சீலர்களாக வருகைதந்து எம்பெருமானின் இஷ்ட சித்திகளைப் பெற்று பிறவிப் பெரும் பயனைப் பெற்றேகுக.

### உற்சவ விவரம்

**2000-12-31**

விக்கிரம வருடம் மார்கழி 16ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை திருவெம்பாவை ஆரம்பம்.
தினமும் காலை 7.00 மணிக்கு விஷேச அபிஷேகம், திருவெம்பாவை ஓதல், வசந்த மண்டப பூசை, திருவீதி உலா.

**2001-01-08**

மார்கழி 24ஆம் நாள் திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு தேரிற்கு சுவாமி எழுந்தருளல், பஞ்சரதப் பவனி. பின்னிரவு 2.00 மணிக்கு ஆருத்திரா அபிஷேகம் அதிகாலை 5.30 மணிக்கு சிறப்பு ஆராதனை.
(உதயம் நடேசர் ஆருத்திரா தரிசனம்)

ஆ.அம்பலவிமுருகன்
மு.சுந்தரலிங்கம்.
ஆதீன கர்த்தாக்கள்.

*சிவன் கோயில்,*
*காரைநகர்.*
(C/14458)

பொதுசன நூலகம்

# நத்தார்க் கொண்டாட்டத்தின் போது சீனாவில் நடன அரங்கில் ஏற்பட்ட தீ விபத்தில் 300 பேர் உயிரிழப்பு!

## 10 ஆண்டுகளில் நடந்த கொடிய சம்பவம்!!

பெய்ஜிங், டிசெம்பர் 27

சீனாவில் நடன அரங்கு ஒன்றில் ஏற்பட்ட தீவிபத்தில் நத்தார்க் கொண்டாட்டங்களில் பங்குபற்றிக் கொண்டிருந்தவர்கள் உட்பட 300க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்தனர். பலர் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

கடந்த 10 ஆண்டுகளில் சீனாவில் ஏற்பட்ட கொடிய தீ விபத்து இது என்று கூறப்படுகிறது.

லுவோயாங் நகரின் மத்தியில் உள்ள வர்த்தக வளாகக் கட்டடத்தின் 4 ஆவது மாடியில் அமைந்திருந்த நடன அரங்கில் நேற்று முன்தினம் மாலை நத்தார்க் கொண்டாட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. கொண்டாட்டத்தில் சுமார் 300 பேர் பங்குபற்றினர்.

அந்தச் சமயத்தில் தரைத் தளத்தில் இருந்த கடை ஒன்றில் பற்றிய தீ வேகமாகப் பரவி எரிந்தது.

கட்டடத்தின் 2 ஆவது, மற்றும் 3 ஆவது மாடிகளில் திருத்த வேலைகளில் ஈடுபட்டிருந்த கட்டடத் தொழிலாளர்களைக் கொழுந்து விட்டெரிந்த தீ சூழ்ந்துகொண்டது.

அப்போது தொழிலாளர்களும், தரைத் தளத்தில் இருந்தவர்களும் அபாயக் குரல் எழுப்பினர்.

நடன அரங்கில் கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் எழுப்பிய மகிழ்ச்சி ஆரவாரங்களினால் அவர்களுக்குக் கீழ்த் தளத்திலிருந்து கிளம்பிய எச்சரிக்கைக் குரல்கள் கேட்கவில்லை.

வேகமாகப் பரவிய தீயும், கரும் புகையும், நடன அரங்கைச் சூழ்ந்த பின்னரே அங்கிருந்தவர்களுக்கு நிலைமையின் விபரீதம் புரிந்தது.

அதற்குள் காலங் கடந்து விட்டிருந்ததால் தீயில் சிக்கியும், புகையால் மூச்சுத் திணறியும் கட்டடத்தில் இருந்தவர்களில் 300-க்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர்.

தீயணைப்பு வீரர்கள் விரித்த பாதுகாப்பு வலையின் மேல் ஜன்னல் வழியாகக் குதித்து 7 பேர் உயிர் தப்பியதாக நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இறந்தவர்களில் பெரும்பாலானோர் புகையினால் மூச்சுத்திணறி இறந்ததாகச் சீனாவின் அதிகாரபூர்வ செய்தி நிறுவனமான "ஜிம் கூவா" கூறியது.

கடந்த 10 ஆண்டுகளில் இதுபோன்ற மோசமான தீ விபத்து சீனாவில் இடம்பெறவில்லை என்றும் அது மேலும் கூறியுள்ளது.

## வாஜ்பாயின் 77 ஆவது பிறந்த நாள்

இந்தியப் பிரதமர் வாஜ்பாய் தனது 77 ஆவது பிறந்த நாளை நேற்று முன்தினம் கொண்டாடினார்.

தோழமைக் கட்சிகள் எதிர்க்கட்சிகளின் தலைவர்கள், ஜனாதிபதி மற்றும் ஆளுநர்கள் உட்படப் பலரும் பிரதமருக்கு வாழ்த்துத் தெரிவித்தனர்.

## 'கரோல்' குழுவைச் சேர்ந்த 17 பேர் மரணம்

லத்தீன் அமெரிக்க நாடான பொலிவியாவில் நத்தார்ப் பண்டிகையன்று நெடுஞ்சாலையில் இரு பஸ்கள் மோதி விபத்துக்குள்ளானதில் 17 பேர் இறந்தனர். 48 பேர் காயமடைந்தனர்.

இரு பஸ்களிலும் நத்தார் 'கரோல்' பாடகர் குழுக்கள் பயணம் செய்ததாகக் கூறப்படுகிறது. (ஒ)

## வீரப்பனைத் தேடும் பணியில் முதல் தடவையாகக் ஹெலிகள்

கோவை, டிசெ. 27



தமிழகத்தின் கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மலைப் பகுதிகளில் 200 சதுர கிலோ மீற்றர் பிரதேசத்தில் சந்தன மரக் கடத்தல்காரன் வீரப்பனைக் ஹெலி மூலம் தேடும் பணி தொடக்கப்பட்டது வீரப்பனைத் தேடும் நடவடிக்கைகளில் விமானப் படையினர் உதவிபெறப்பட்டுள்ளது இதுவே முதல்தடவையாகும்.

ஒன்றரைக் கிலோ மீற்றர் முதல் 2 கிலோ மீற்றர் தூரம் வரை நடமாட்டங்களைக் கண்காணிக்கும் திறனுள்ள மின் அணுத் தொலைநோக்கிகள் பொருத்தப்பட்ட இரு ஹெலிகள் தேடுதல் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

சிறப்பு அலுவல்படை, எல்லைக்காவல் படை ஆகியவற்றைச் சேர்ந்த அதிகாரிகள் ஹெலிகள் மூலம் தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

## இலங்கைக் கடற்படை குறித்து தமிழக மீனவர்கள் முறைப்பாடு

மதுரை, டிசெ. 27

கடந்த 20 ஆம் திகதி இராமேஸ்வரத்தில் இருந்து 8 மீனவர்கள் மீன் பிடிக்கக் கடலுக்குச் சென்றனர்.

அவர்கள் திரும்பி கரைக்கு வராததால் மேலும் 8 மீனவர்கள் அவர்களைத் தேடிக் கடலுக்குச் சென்றனர். அவர்களும் திரும்பிக் கரைக்கு வரவில்லை.

காணாமற் போயிருந்த அந்த 16 மீனவர்களும் கடந்த ஞாயிறு இராமேஸ்வரம் வந்தடைந்துள்ளனர்.

இவர்கள் அனைவரையும் இலங்கைக் கடற்படையினர் பிடித்துச் சென்றதாகவும் —

நத்தார் கொண்டாட்டத்துக்காக மீன் பிடித்துத் தரும்படி அவர்கள் தம்மை வற்புறுத்தியதாகவும் —

கரை சேர்ந்துள்ள மீனவர்கள் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

(ஒ—5)

# இந்திய இராணுவத் தலைமையகம் மீது காஷ்மீரில் தீவிரவாதிகள் தற்கொலைத் தாக்குதல்!

## 10 பேர் பலி; பலர் படுகாயம்!

ஸ்ரீநகர், டிசெ. 27

காஷ்மீரில் இராணுவத் தலைமையகம் மீது தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைத் தாக்குதலில் 10 பேர் கொல்லப்பட்டனர்; 26 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

பட்வாராவில் உள்ள இராணுவத் தலைமையகம் மீது பிற்பகல் 2.25 மணியளவில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

வெடிமருந்துகள் நிரப்பப்பட்ட காரை ட்டிக் வந்த தற்கொலைப்படைநபரை சோதனைச்சாவடியில் இராணுவப் பொலிஸார் தடுத்து நிறுத்த முயற்சித்தனர்.

அதனை மீறிக் காரை ஓட்டிச் சென்ற தற்கொலைப் படைநபர் இராணுவத் தலைமையகக் கட்டடத்தில் காரை மோதி வெடிக்க வைத்தார்.

இந்தக் குண்டுத்தாக்குதலில் 6 இராணுவத்தினர் மற்றும் 4 பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர். 26 பேர் காயமடைந்தனர்.

இராணுவத் தலைமையகத்தின் அருகில் அமைந்திருந்த வர்த்தக வளாகத்தில் குண்டு வெடிப்பினால் தீப்பிடித்துக் கொண்டதாகக் கூறப்படுகிறது.

இதற்கிடையில், பாகிஸ்தானில் இருந்து செயற்படும் ஜமியத் உல் முஜாஹிதீன் என்ற தீவிரவாத அமைப்பு இத்தாக்குதலுக்குத் தாமே காரணம் என்று பொறுப்பேற்றுள்ளது.

காஷ்மீரில் கடந்த 20 ஆம் திகதி முதல் இந்திய அரசு அறிவித்துள்ள ஒருதரப்பான தாக்குதல் நிறுத்தத்தின் போது இதுவரை தீவிரவாதிகளின் வன்முறை நடவடிக்கைகளில் 50 பேர் உயிரிழந்துள்ளனர்.

## 'பிடே' பட்டம் வென்ற முதல் ஆசியர்

'பிடே' உலக சதுரங்கச் சம்பியன் பட்டத்தை இந்தியாவின் கிராண்ட் மாஸ்ரர் விஸ்வநாதன் ஆனந்த் வென்றுள்ளார்.

ஈரான் தலைநகர் தெஹ்ரானில் நடந்த இறுதிப் போட்டியில் ஸ்பெயினின் அலக் டிஸ்டிரோவைத் தோற்கடித்து ஆனந்த் பட்டம் வென்றார்.

இது நாள் வரை சதுரங்க ஆட்டத்தில் ரஷ்யர்களின் ஆதிக்கத்தை முறியடித்து 'பிடே' சதுரங்க சம்பியனாகிய முதலாவது ஆசியர் ஆனந்த் ஆவார்.


## 3 ஆம் வருட ஞாபக தினம்

மண்ணில் 01—09—1934

விண்ணில் 27—12—1997

செல்வி

எமிலி அருள்ராசமலர் தம்பிமுத்து

நீவிர் உச்சித மோட்ச பட்டணத்தில்
ஓயா இன்பம் பெறுவதில் ஆறுதல் அடைகின்றோம்.

சகோதரிகள், மைத்துனன்,
பெறாமக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

இரஞ்ஜஸ்ரான்,
ஏழாலை வடக்கு,
ஏழாலை.

(82089)



## அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

உடுவில் தமிழ் ஒளி விளையாட்டுக் கழகத்தினால், 25-12-2000 ஆம் திகதி நடத்தப்பட்ட அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பின் போது பரிசுபெற்ற சீட்டுக்களின் இலக்கங்கள்:-

1 ஆம் பரிசு — 0034   2 ஆம் பரிசு — 0958

3 ஆம் பரிசு — 0120

பத்து ஆறுதல் பரிசுகள்

2261, 1811, 1721, 1812, 0751, 0783, 2743, 0764, 0284, 0653.

பரிசில்களை 27-01-2001 ஆம் திகதிக்கு முன் பெற்றுக்கொள்ளவும்.

நிர்வாகிகள்

உடுவில் வடக்கு,
சுன்னாகம்.

(82136)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கூட்டுறவுக் கொள்கைக்கு
ஒரு முன்னுதாரணமாகத் திகழ்ந்து

25 ஆண்டுகளைப் பூர்த்தி செய்த

பனை தென்னைவள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின்

"வெள்ளி விழா மலர்"

வெளியீடு செய்வதைப்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்.
வலிகாமம் பனை, தென்னைவள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின்
கொத்தணி.

சங்கானை வீதி,
மானிப்பாய்.

(14467)

# வடமராட்சி கல்வி வலயத்தில் 21 ஆசிரியர்கள் நியமனம்

பருத்தித்துறை, டிசெ. 27
வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் மேலும் 21 பேருக்குப் புதிதாக ஆசிரிய நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ் மொழி மூல தகுதி காண் ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர்களுக்குரிய நியமனக் கடிதங்கள் கிடைத்துள்ளதாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா அறிவித்துள்ளார்.

அவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

**ஆரம்பக் கல்வி நெறி**

★ செல்வி க. அனுசியா (புலோலி)
★ த. தயாளன் (அல்வாய்)
★ வீ. ரங்கநாதன் (அல்வாய்)
★ க. தர்மதேவன் (அல்வாய்)
★ சு. பார்த்திபன் (உடுப்பிட்டி)
★ செல்வி இ. கிருஷாந்தி (அல்வாய்)
★ செல்வி ஆ. அனுஷியா (குடத்தனை)
★ இ. கமலநாதன் (செம்பியன்பற்று)
★ இ. ஜோசப் சுதர்சன் (தாழையடி)

**ஆங்கிலம்**

★ செல்வி சி. பகிரதி (துன்னாலை)
★ சோ. குகதாசசர்மா (பருத்தித்துறை)
★ செல்வி ஈ. சுகந்தி (தம்பவெட்டி)
★ செல்வி கு. சிவாஜினி (குரும்பசிட்டி, புலோலி)
★ செல்வி த. உஷா (புலோலி தெற்கு)
★ செல்வி தி. மிதுலா (வராத்துப்பளை)

**சங்கீதம்**

★ செல்வி பா. பாமா (அம்பன்)
★ செல்வி கி. ஜானகி (கெருடாவில்)
★ செல்வி து. சகிலா புலோலி கிழக்கு)

**சித்திரம்**

★ சி. நேசலிங்கம் (உடுப்பிட்டி)

**நடனம்**

★ செல்வி எம். வனிதா (கரவெட்டி)

**விவசாயம்**

★ செல்வி ந. அருந்தவராணி (பொலிகண்டி).

மேற்படி ஆசிரியர்களை எதிர்வரும் முதலாந் தவணை முதல் கடமையேற்குமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

(ஐ-8-118)


**தேவை**

ஓவ்(F) செற் மெசின் மைண்டர் பைண்டர்

ஆண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்.

**விவேகானந்தா அச்சகம்,**
யாழ்ப்பாணம்.

(சி/14479)



## கண்ணீர் அஞ்சலி

பிரபல ஓவியக் கலைஞர்

**இரத்தினம் கனகராசா**

அவர்களின் மறைவையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பொ. நித்தியானந்தம் (செல்வம்)
(மைத்துனர்)

லதா கொமினிகேசன் & வீடியோ,
காளி கோயிலடி,
திருநெல்வேலி.
T.P. No. 3521

(சி/14481)


## மரண அறிவித்தல்கள்

### கனகரத்தினம் விமலராஜா [பழத்தார்]

கட்டுடையைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம்விமலராஜா அவர்கள் நேற்று (26-12-2000) செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினம்- செல்லக்கண்டுவின் அன்பு மகனும், இளையதம்பி - தங்கம்மாவின் அன்பு மருமகனும், திலகவதியின் அன்புக் கணவரும்காலஞ்சென்றவர்களான கனகராஜா திரவியராஜா மற்றும் ஜெயராஜா, செல்வராணி, விவேகானந்தராஜா (சவூதி),மனோரஞ்சிதராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான சிவரத்தினம் (சட்டத்தரணி-சண்டிலிப்பாய்), பத்மநாதன் (திருகோணமலை) மற்றும் விக்னராஜா (காந்தி-விரிவுரையாளர், அமெரிக்கா), சிவனேஸ்வரி (கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27-12-2000)புதன்கிழமை கொழும்பில் நடைபெறும்.

தகவல்:
**திருமதி சர்வானந்தம் மனோரஞ்சிதராணி** (சகோதரி)
**தி. காந்தன்** (மருமகன்)

33, இ. எஸ். பெர்னான்டோ மாவத்தை,
வெள்ளவத்தை.
T. P. No: 01-593059

61/4, கோயில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(சி/14480)

### திருமதி வைத்திலிங்கம் சரஸ்வதி

காரைநகர் அல்லின் வீதியைச் சேர்ந்த திருமதி வைத்திலிங்கம் சரஸ்வதி நேற்று (26-12-2000) செவ்வாய்க்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற வைத்திலிங்கத்தின் அன்பு மனைவியும், சொர்ணமலர், உமா மகேஸ்வரன் (ஆசிரியர், விவேகானந்தா கல்லூரி, கொழும்பு), சோதிமலர், சந்திரா, கமலராணி ஆகியோரின் அன்புத் தாயாரும் சுந்தரராசா, அருணானந்தம் (சுந்தரம் ஸ்ரோர்ஸ் அப்புத்தளை), செல்வராணி ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(28-12-2000) வியாழக்கிழமை காலை 10-00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் சாம்பலோடை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**பிள்ளைகள்**

அல்லின் வீதி,
காரைநகர்.

(சி/14478)

## பரீட்சை அனுமதி அட்டை

யாழ்ப்பாணம், டிசெ. 27
கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் 2000 ஆம் ஆண்டு பரீட்சைக்குத் தோற்றும் ஆசிரிய மாணவர்கள் தங்கள் பரீட்சை அனுமதி அட்டைகளை நாளை வியாழக்கிழமை காலை 10 மணிக்கு ஆசிரிய கலாசாலையில் பெற்றுக் கொள்ளுமாறு கலாசாலை அதிபர் கேட்டுள்ளார்.

(ஐ-8)

## நீதிமன்றம் உத்தரவு

யாழ்ப்பாணம், டிசெ. 27
பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவரை 2001 ஜனவரி 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிவான் உத்தரவிட்டார்.

காங்கேசன்துறை பொலீஸாரினால் நேற்று யாழ். நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட சச்சிதானந்தன் சுதன் (ஈவினை, புன்னாலைக்கட்டுவன்) என்பவரே தடுத்து வைக்கப்பட்டவராவார்.

சட்டமா அதிபரின் அறிவுறுத்தல் வரும்வரை மேற்படி இளைஞரை யாழ்.சிறைச்சாலையில் விளக்க மறியலில் வைக்குமாறு யாழ். நீதிவான் இ. த விக்கினராஜா உத்தரவிட்டார்.

(ஐ-5)

## சமுர்த்தி செயலணி அமைக்கும் கூட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 27
நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட—கோண்டாவில் வடமேற்கு ஜே-115 கிராம சேவையாளர் பிரிவில் சமுர்த்தி செயலணிக் குழு அமைக்கும் கூட்டம் எதிர்வரும் 31ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3—00 மணிக்கு இணுவில் மஞ்சத்தடி விவேகானந்தா கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் சமுர்த்தி வலயம்—2 இன் முகாமையாளர் ஆர். ஜெயதாஸ் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலர் கலாநிதி க. குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். இந்த நிகழ்வுக்குக்குறிப்பிட்ட கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட சகலரையும் கலந்து கொள்ளுமாறு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் என். அகிலன் கேட்டுள்ளார்.

(ஐ-8)

## சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை, டிசெ. 27
இணுவில் அருள்மிகு ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் கோயிலில் பிள்ளையார் பெரும் கதைப் படிப்பு ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

(ம-30)

* * *

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தில் ஜனவரி 7 ஆம் திகதி ஞாயிறு காலை 8 மணிக்குத் திருவாசக முற்றோதல் இடம்பெறும்.

அன்று மாலை ஆறு. திருமுருகனின் அருஞ்சொற்பொழிவும் இடம்பெறவுள்ளது.

(ம-90)

## கைதானவர் விடுவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 27
பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு காங்கேசன்துறை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று யாழ். நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டார்.

மானிப்பாய் வீதி, கைதடியைச் சேர்ந்த பா. சிவரட்ணம் என்பவரே விடுவிக்கப் பட்டவராவார்.

இவர் மீது குற்றச்சாட்டுகள் எதுவும் இல்லாத காரணத்தினால் இவரை விடுவிக்குமாறு பொலிஸார் தெரிவித்ததை அடுத்து யாழ். நீதிமன்ற நீதிவான் இ. த. விக்னராஜா இவரை விடுதலை செய்தார்.

(ஐ-5)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், டிசெ. 27
மு. சிங்கராயர் எழுதிய 'தூது போ தென்றலே' நூல் வெளியீட்டு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு யாழ். மறைக்கல்வி நடுநிலைய அரங்கில் யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர் கலாநிதி எஸ். சிவலிங்கராஜா தலைமையில் நடைபெறும்.

யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் அருட்திரு ஜே. பி. ஈ. செல்வராஜா ஆசியுரை வழங்குவார். யாழ். பல்கலைக்கழக அரசறிவியல் சமூகவியல் துறைத் தலைவர் கலாநிதி என். சண்முகலிங்கன் வெளியீட்டுரையையும், கலாநிதி காரை. சுந்தரம்பிள்ளை ஆய்வுரையையும் நிகழ்த்துவார்கள்.

(ஐ-8)

## கிரனேட் மீட்பு

சப்பிரகமுவ பல்கலைக்கழக வளாகத்தினுள் நவீன ரக 'கிரனேட்' ஒன்றைக் குரு விட்ட பகுதி படையினர் கண்டுபிடித்துச் செயலிழக்கச் செய்ததாகக் கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

பலாங்கொடப் பொலீஸார் வழங்கிய தகவலை அடுத்தே கிரனேட்டைக் கண்டு பிடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-8)

## தமிழகத்தில் புயல் அபாயம்

தென் மேற்குவங்கக் கடலில் உருவாகியுள்ள கடுமையான புயல் காற்று இன்று காலை தூத்துக்குடிக்கும் நாகபட்டினத்துக்கும் இடையே கரையைக் கடக்கும் என்று சென்னை வானிலை ஆராய்ச்சி மையம் எச்சரித்துள்ளது.

(ஒ)




## புதுக்கடை திறப்பு விழா அழைப்பு

இதுவரை காலமும் 23, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்கி வந்த **விநாயகர் பென்சி**

நிகழும் விக்கிரம வருடம் மார்கழி மாதம் 12 ஆம் திகதி இன்று (27-12-2000) புதன்கிழமை காலை 9-27 மணி முதல் 10-27 மணி (பழைய நேரம்) வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

புதிதாக புதிய முகவரியில்

**விநாயகர் பென்சி**

ஆரம்பித்து வைக்கப்படவுள்ளதால் அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அத்தருணம் வருகை தந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்
உரிமையாளர்.

**இ. நாகேந்திரன் (மாமாதம்பி)**

இல- 9, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

(82158)

பொதுசன நூலகம்



மிருசுவில் வடக்குப் பகுதியில் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட எண்மரில் ஐவரின் சடலங்களை மேலேயுள்ள படங்களில் காணலாம். இந்த சடலங்களைப் பார்வையிடுவதற்காக மந்திகை வைத்தியசாலை பிரேத அறைக்கு அருகே கூடியிருந்தோரை இறுதியாக உள்ள படத்தில் காணலாம். (ஐ)

## பருத்தித்துறை துறைமுக பணிகள் ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம்,டிசெ.27

வடமராட்சி கடற்பரப்பில் நிலவும் கடற் கொந்தளிப்புக் காரணமாக கடந்த மூன்று நாள்களாக பருத்தித் துறை துறைமுகவேலைகள் தடைப் பட்டுள்ளன.

கப்பல்களில் இருந்து பொருள் கள் இறக்கும் பணி தடைப்பட்ட தால், இறக்கப்பட்ட பொருள்கள் போக எஞ்சிய பொருள்களுடன் கப் பல்கள் காங்கேசன்துறை துறை முகத்திலேயே தரித்து நிற்கின்றன.

# மிருசுவில் படுகொலை குறித்து 'ட்ரயல் அற் பார்' விசாரணை

## மகேஸ்வரன் எம்.பி. கோரிக்கை

மிருசுவில் வடக்குப் பகுதியில் அப்பாவிப் பொதுமக்கள் 8 பேர் கொடூரமாகக் கொன்று புதைக்கப் பட்ட சம்பவம் தொடர்பாக 'ட்ரயல் அற் பார்' நீதிமன்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று ஐ.தே. கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினரான தி.மகேஸ் வரன் பிரதமர் ரத்னசிறி விக்கிரம நாயக்கவிடம் கேட்டுள்ளார். இது தொடர்பாக அவர் பிரதமருக்கு கடி தம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

இதுவரை கிடைத்த தகவல் களின்படி இந்தக் கொடூரக் கொலை களை இராணுவத்தைச் சேர்ந்தோரே புரிந்துள்ளனர் என்பது தெரிகிறது. அத்துடன் இதில் சம்பந்தப்பட்டவர் கள் எனச் சந்தேகிக்கப்படுவோர் இராணுவப் பொலீசாரின் பாதுகாப் பில் தற்போது பலாலியில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது. இதுவிடயத்தில் இரா ணுவ விசாரணைக்குப் புறம்பாக 'ட்ரயல் அற பார்' நீதிமன்ற விசா ரணை மூலம் நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்று அக்கடிதத்தில் மகேஸ் வரன் எம்.பி. கோரியுள்ளார். (ஐ)

## டிரக் மோதி இளைஞன் படுகாயம்

புன்னாலைக்கட்டுவன் ஆயக்கட வைச் சந்திப் பகுதியில் நேற்றுக் காலை 8 மணியளவில் இடம்பெற்ற விபத்துச் சம்பவத்தில் சைக்கிளில் சென்ற இளைஞர் ஒருவர் படுகாயம டைந்தார்.

இராணுவ டிரக் ஒன்று சைக் கிளை மோதியதில் இந்த விபத்து நேர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. பலாலியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த இரா ணுவ டிரக் ஒன்று சைக்கிளில் சுன் னாகம் சந்தைக்குச் சென்று கொண் டிருந்த இந்த இளைஞனை மோதித் தூக்கி வீசியதாகத் தெரிவிக்கப்பட் டது.

புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த துரைராசா நந்தகுமார் (வயது 22) என்பவரே படுகாயம டைந்தார். இவருக்குப் பலத்த உட் காயங்கள் ஏற்பட்டிருப்பதாகத் தெரி விக்கப்பட்டது. (ஐ-6)

## கான்ஸ்டபிள் காயம்

யாழ்ப்பாணம்,டிசெ.27

மாடிப் படியில் இருந்து தவறி விழுந்த பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் யாழ்.ஆஸ்பத்திரியில் அனு மதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்.பொலீஸ் நிலையத்தில் நேற்று இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஜி.ஜெயதிலகா (வயது 35) என்ப வரே தவறிவீழ்ந்து காயமடைந்த வராவார். (ஐ-15)

கவின் கலைகள் பயிலகம்
திருமறைக் கலாமன்றம்

எமது பயிலகத்தினால் நடத்தப்படும் கீழ் உள்ள கற்கை நெறிகளுக்கான 2001 ஆம் ஆண்டுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

✡ சங்கீதம் ✡ நடனம்
✡ மிருதங்கம் ✡ வீணை
✡ வயலின் ✡ ஓர்கன்
✡ கிற்றார் ✡ ஓவியம்

விண்ணப்ப முடிவு திகதி : 10.01.2001
விண்ணப்பப் படிவங்களை மன்ற அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.- 2393
(C/14475)
பொதுச்செயலாளர்
திருமறைக் கலாமன்றம்.

IBMS இன் புலமைப் பரிசில் திட்டம் 2001

5000 மாணவர்களுக்கு
* அனைத்து தரப்பினருக்கும் ஏற்ற வகையில் திட்டமிடப்பட்ட பாடவிதானம்
* BIT பட்டப்படிப்பினை மேற்கொள்வதற்குரிய அரிய சந்தர்ப்பம்
* வார மற்றும் வார இறுதிநாட்களில் உங்கள் வசதிக்கு ஏற்ப விரிவுரைகள்.

கீழ்க்காணும் மாதிரி விண்ணப்பத்தை சுயமாக தயாரித்து Director: IBMS ,701 K.K.S Road Jaffna. என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

மாதிரி விண்ணப்ப படிவம்
Full Name:
Address(Perm & Tem):
N.I.C/ Special I.C.No:
Sex: Date of Birth:
Course:
Signature: Date:

பரீட்சைக் கட்டணம் இலவசம்,
அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்

விண்ணப்பமுடிவுத்திகதி நீடிக்கப்பட்டுள்ளது 31.12.2000

வடமராட்சி மாணவர்களுக்காக நெல்லியடியில் எமது கிளை.........

IBMS, 701, K.K.S Road,Jaffna.
IBMS, Near M.P.C.S , Chankanai.
IBMS, N.M.M.V Road, Nelliyadi.
IBMS தகவல் தொழில்நுட்பத்தின் புதிய சகாப்தம்

BRIGHTMAN
கல்வி நிலையம்
பிறவுண் வீதி, யாழ்நகர்.
A/L 2002
இணைந்த கணிதம்
By: ஐங்கரன் B.Sc.
ஆரம்பம்: 28.12.2000
(வியாழன்) - 4.30 p.m.
(82154)

மங்களகரமான ஆரம்பம்!
சரசாலை வடக்கில் இயங்கிய
பிள்ளையார் அரைக்கும் ஆலை
இன்று (27-12-2000) புதன்கிழமை காலை 9.55 மணிமுதல் சுபநேரத்தில்
நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்துக்கு முன்பாக
ஆரம்பமாகின்றது.
அன்பர்கள், ஆதரவாளர்களை அன்புடன் அழைக்கின்றோம்.
கெங்காதரன் பாலகுமார்
உரிமையாளர்.
(C/14477)

ஆங்கிலம்
2001 ஆம் ஆண்டு ஆரம்பமாகும் புதிய Syllabus
அரச சேவை ஆசிரியரால் பிரத்தியேகமாகக் கம்பீரமான முறையில் கற்பிக்கப்படும்.

கட்டணம்:

| | ரூபா | மணித்தியாலம் |
|---|---|---|
| O/L | 100/= | 1 |
| A /L | 150/= | 1 |

தொடர்பு:
1.கருணாகரன் - லிங்கம்ஸ் சில்க் கவுஸ், யாழ்ப்பாணம்.
2.சபாநாயகம் - ஆலங்குழாய், சண்டிலிப்பாய.
(82155)

திகதி மாற்றம்
யாழ்.பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தினால் 28-12-2000 அன்று நெல்லியடி ராஜலக்ஷ்மி திரையரங்கில் நடத்தப்படவிருந்த இன்னிசை விருந்து தவிர்க்க முடியாத காரணத்தினால் 30-12-2000 சனிக்கிழமை இடம் பெறும் என்பதனை அறியத்தருகின்றோம்.
வணிக மாணவர் மன்றம் யாழ்.பல்கலைக்கழகம்.
(82156)

புலமைப் பரிசில் திட்டம் - 2001
அறிவித்தல்

மேற்படி திட்டத்தினூடாக எமது நிறுவனத்தில் 2001/2002 கல்வியாண்டில் கணனிக் கற்கை நெறிகளை மேற்கொள்ள விண்ணப்பித்த மாணவர்களின் கவனத்திற்கு :

புலமைப்பரிசில் போட்டிப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள்
அனுப்பிவைக்கப்படும் திகதி : 03-01-2001
போட்டிப்பரீட்சை இடம்பெறும் திகதி : 07-01-2001
கற்கை நெறிகள் ஆரம்பமாகும் காலப்பகுதிகள் :
I : 14-01-2001 [ஞாயிறு]
II : 05-05-2001 [சனி]
III : 15-09-2001 [சனி]

புலமைப்பரிசில் திட்டத்திற்கு விண்ணப்பித்த மாணவர்கள் போட்டிப்பரீட்சைக்கு பொதுஅறிவு, நுண்ணறிவு என்பவற்றினை ஆயத்தப்படுத்துமாறு அறிவுறுத்தப்படுகின்றீர்கள்.

"IIS உங்கள் வளமான எதிர்காலத்தின் வழிகாட்டி"

Institute of Informatics Studies
IIS, 100, ...
T.P No 021-2891 E-mail : iis@sltnet.lk

# தமிழர்களின் இன்றைய நிலைக்கு அரசுகள் புரிந்த தவறே காரணம்

## சம்பந்தன் அறிக்கை

கொழும்பு,டிசெ.27

இலங்கையில் அடுத்தடுத்து வந்த அரசுகள் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நீதியான தீர்வை வழங்கத் தவறியதன் விளைவே இன்று யாழ்.மக்கள் அதிநவீன ஆயுதங்களின் உபயோகத்தால் அழிவுகளைச் சந்தித்துள்ளனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் யுத்த நிறுத்தம் தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இப்படிக் கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

நோர்வேயின் முன் முயற்சி காரணமாக இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் பேச்சுக்களில் ஈடுபடச் சம்மதித்தன. ஆனால் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படவுமில்லை. யுத்தம் நிறுத்தப்படவும் இல்லை.

விடுதலைப் புலிகள் தமது நல்லெண்ணத்தை வெளிக்காட்டும் வகையில் யுத்த நிறுத்தம் செய்துள்ளனர். ஆனால் அரசு இந்த யுத்த நிறுத்தத்தைக் கவனத்தில் எடுக்கவில்லை.

ஆனால் அரசின் அறிக்கைகள் புலிகளின் நல்லெண்ணத்தைச் சந்தேகிப்பதாகவே உள்ளன. கடந்த காலங்களில் தமிழ்மக்கள் வன்முறையை விடுத்து அமைதி வழிகளில் தீர்வுகாண முயற்சித்து வந்ததை அரசு நினைத்துப் பார்க்க வேண்டும்.

நாட்டில் எந்தப் பகுதியிலும் இல்லாத பேரழிவை யாழ்.மக்கள் எதிர்கொண்டுள்ளனர். இந்த நிலை தொடராது நிறுத்தப்பட வேண்டும். இதுவே தமிழ் மக்களின் அடிப்படை வேண்டுகோளாகும் - என்று சம்பந்தன் தெரிவித்துள்ளார். (ஐ-3-ஒ)

## மிருசுவில் படுகொலைச் சம்பவம்

# சுதந்திரமான விசாரணை நடத்தி குற்றவாளிகளைத் தண்டிக்குக!

## மாவை எம்.பி. ஜனாதிபதிக்குக் கடிதம்

யாழ்ப்பாணம்,டிசெ.27

மிருசுவில் வடக்கில் எண்மர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக சுதந்திரமான விசாரணை நடத்தி சம்பந்தப்பட்டவர்களுக்குக் கடும் தண்டனை வழங்க வேண்டும் என்று யாழ்.மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா ஜனாதிபதியிடம் கோரியுள்ளார்.

நேற்று ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள 'அவசர பக்ஸ்' செய்தியிலேயே இந்தக் கோரிக்கையை அவர் விடுத்துள்ளார்.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த 19 ஆம் திகதி மிருசுவில் வடக்குப் பகுதியிலுள்ள தமது வீடுகளைப் பார்க்கச் சென்ற எட்டுப் பொதுமக்கள் காணாமல் போயிருந்தனர். இவர்கள் பின்னர் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட சடலங்கள் கைகள் கட்டப்பட்ட நிலையிலும் கழுத்து, கைகள் வெட்டப்பட்ட நிலையிலும் இருந்தன. தங்கள் படையினரின் இந்தப் பாதகச் செயல்களை அறிந்து அதிர்ச்சியால இரத்தம் உறைந்துவிடும் நிலையை அடைந்தேன்.

இந்தச் செயலானது படையினரின் தொடர் நடவடிக்கைகளே. இந்தச் செயலானது அப்பட்டமான மனித உரிமை மீறல் மட்டும் அன்றி தமிழின அழிப்பு நடவடிக்கையின் இன்னொரு கட்ட நடவடிக்கை என்பதில் ஐயமில்லை.

மிகவிரைவில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டு இராணுவத்தை இங்கிருந்து வெளியேற்றிவிடுவதன் மூலமே பாரிய இன அழிவுகளைத் தடுத்து நிறுத்தலாம் எனக் கருதுகிறேன்.

கீழ்க்கண்ட கோரிக்கைகளை தங்கள் முன் வைக்கிறேன்.

★ சுதந்திரமான விசாரணை நடத்தி குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டும்.

★ இது போன்ற கொலைகளும் புதைகுழிகளும் பாலியல் வல்லுறவுகளும் தொடர்ந்தும் ஏற்படாமல் இருக்க தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

★ கொல்லப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும்.

இவ்வாறு அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## போக்குவரத்துப் பாதிப்பு

காரைநகர்,டிசெ.27

காரைநகருக்கான பொன்னாலைப் பாலத்தின் ஊடான போக்குவரத்துக்கள் நேற்று கடும் காற்று, கடற்கொந்தளிப்புக் காரணமாக பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தன.

சைக்கிள், மோட்டார் சைக்கிள்களில் சென்றோர் கடும் காற்று மற்றும் கடல்நீர் அலைமூலம் வீதிக்கு அள்ளி வீசப்பட்டதாலும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியதுடன் பெரும்பாலானோர் பஸ்களிலேயே பயணம் செய்தனர்.

காரைநகர் பகுதியில் கடும் காற்று காரணமாக தென்னைகள் மற்றும் பயன்தரு மரங்கள் பல முறிந்து வீழ்ந்துள்ளன. இதேவேளை -

பனைகளைக் கணக்கெடுக்கும் பணியில் ஈடுபட்டிருந்த சமுர்த்திஅபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கடுங்காற்று, மழை காரணமாக அப்பணியினை நேற்று தற்காலிகமாக இடைநிறுத்தி உள்ளனர். (ஐ-73)

## கடும் புயல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருகிறது. எனினும் கிழக்கிலேயே மழையால் பலத்த சேதங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

### குடாநாடு

நேற்றுக் காலை முதல் குடாநாட்டில் பரவலாகத் தொடர்ந்து பெய்து வரும் மழை மற்றும் கடும் காற்றுக் காரணமாக சிறிய அளவில் சேதங்கள் ஏற்பட்டுள்ளன. தாழ்ந்த பகுதிகளில் வெள்ளநிலை ஏற்பட்டுள்ளது. சில இடங்களில் மரங்களும் முறிந்து வீழ்ந்துள்ளன. சில பகுதிகளில் மின் விநியோகம் துண்டிக்கப்பட்டிருந்தது.

### திருமலை

திருமலை மாவட்டத்தில் சல்லி, உப்புவெளி ஆகிய கடற்கரைக் கிராமங்களுக்குள் கடல்நீர் புகுந்ததால் மீன்பிடிக்கச் சென்ற இருவர் உயிரிழந்தனர்; 27 பேர் காயமடைந்தனர்.

பலத்த புயற்காற்றுக் காரணமாக திருகோணமலைக்கும் வெளியிடங்களுக்கும் இடையிலான தொலைபேசிச் சேவைகள் துண்டிக்கப்பட்டுள்ளன. அங்கு மின்சார விநியோகமும் ஸ்தம்பித்துள்ளது.

கிண்ணியாவுக்கான படகுச் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது. இறங்குதுறை சேதம் அடைந்திருப்பதாகவும் தகவல் கிடைத்துள்ளது.

தொடர்புகள் துண்டிக்கப்பட்ட நிலையில் திருமலைநகர் உள்ளதால் அங்கு ஏற்பட்ட சேதங்கள் தொடர்பாக மேலதிக தகவல்களைப் பெறமுடியவில்லை.

### மட்டக்களப்பு

மட்டக்களப்பு மாவட்டத்திலும் வெள்ள நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் நேற்றிரவு அங்கு பலத்த காற்று வீசியது. புயல் அபாயமும் எதிர்நோக்கப்பட்டது.

மட்டுநகரில் அரச அலுவலகங்கள், கடைகள் நேற்று மூடப்பட்டிருந்தன. மக்கள் நடமாட்டமும் குறைந்திருந்தது.

வாகரைப் பகுதியில் 10 கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கி உள்ளதாகவும் -

அங்கு மீட்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் -

அரச அதிபர் மௌனகுருசாமி தெரிவித்தார்.

### வவுனியா

வவுனியாவில் கடும் காற்று மழை காரணமாக மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருந்த நலன்புரி நிலையக் கொட்டில்கள் தூக்கி வீசப்பட்டன. இதனால் மக்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகினர்.

வவுனியா நகரப் பகுதியிலும் ஏனைய இடங்களிலும் இயல்பு நிலை ஸ்தம்பித்துள்ளது.

வவுனியா சிதம்பரபுரத்திலுள்ள இடம்பெயர்ந்தோர் முகாம் கொட்டகை மீது மரம் ஒன்று சாய்ந்து வீழ்ந்ததில் அங்கு தங்கியிருந்த சிவராசா ரமேஸ் (வயது 14) என்பவர் உயிரிழந்தார்.

ஈரற்பெரியகுளம் பகுதியில் ரயில் தண்டவாளத்திற்குக் குறுக்கே மரங்கள் வீழ்ந்ததால் ரயில் சேவைகள் தடைப்பட்டுள்ளன.

வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளிலும் கடும் மழை பெய்வதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3-8)

## மலத்தியோன் தட்டுப்பாடு

சண்டிலிப்பாய்,டிசெ.27

யாழ்.மலேரியா தடுப்பு இயக்கப் பிரிவில் மலத்தியோன் நுளம்பு கொல்லி மருந்துக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது. இதனால் மலேரியா நோய் அதிகரித்துள்ள பகுதிகளில் மலத்தியோன் விசிறும் பணி பாதிப்படையும் நிலை ஏற்பட்டுள்ளது.(ஐ-135)


மகிழ்ச்சியான செய்தி:
ஆரம்பிக்கின்றோம்!!
A/L 2003
(கலை,வர்த்தகப் பிரிவுகள்)
ஜனவரி 06
காலை 8 மணி
DMI
யாழ்நகர். (84283)

நாவலர்
ஆனைப்பந்தி
A/L 2001 & 2002
Paper Class
(Wed., Fri. : 5-6 p.m.)
A/L 2003 இற்குரிய
பதிவுகளை 30.12.2000ற்கு
முன்பு மேற்கொள்ளவும்.
CHEMISTRY - அன்பு
(82086)

SCIENCE COLLEGE
கன்னாதிட்டி வீதி - யாழ்ப்பாணம்
2003 - A/L
கணக்கீடு
தவா
ஆரம்பம்: 28.12.2000
வியாழன் பிற்பகல் 3.30 மணி
(பழைய நேரம்)
(82070)

STP Computer World
No: 54A, Palaly Road, Kantharmadam, Jaffna.



கணனி உலகுடன் உங்களை இணைக்கும் பணியில் எங்கள் கரங்கள்
O/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான
10 DAYS FREE CLASSES
SUBJECTS
- COMPUTER FUNDAMENTALS
- COMPUTER HANDLING
- COMPUTER APPLICATIONS
ஆரம்பம் : 03-01-2001 காலை 9.00 மணி
ஆங்கில அறிவு அவசியமில்லை
இன்றைய உலகில் கணனியின் முக்கியத்துவம் என்ன ?
கணனியில் எவ்வகையான கற்கை நெறிகளுள்ளன ?
எந்த கற்கை நெறிகள் உங்களிற்கு ஏற்றவை ?
இவற்றுக்கான பதிலுடன் கணனி கற்றிட உங்களுக்கான இலவச வகுப்புக்கள்.
30-12-2000 இற்கு முன்னர் எமது காரியாலயத்தில் நேரடியாக பதிவுகளை மேற்கொள்ளவும்.
Director

என்றும், எங்கும், எப்போதும்!
பொருளியற் கல்லூரி
A/L 2003 கலை - வர்த்தகம்
இரு இடங்களில்

| நாவலர் வீதி, யாழ்ப்பாணம் | பாடம் | K.K.S. வீதி, இணுவில் |
|---|---|---|
| வரதராஜன் | பொருளியல் | வரதராஜன் |
| முகுந்தன் | கணக்கீடு | முகுந்தன் |
| முரளி | வணிகக்கல்வி | முரளி |
| R.P.சர்மா | அளவையியல் | R.P.சர்மா |
| மீரா | தமிழ் | பாலா |
| ஜோதீஸ்வரன் | இந்து நாகரிகம் | சுரேஸ் |
| ஜோதீஸ்வரன் | இந்துசமயம் | சுரேஸ் |
| சுகந்தன் | நாடகமும் அரங்கியலும் | சுதன் |
| குமரன் | புவியியல் | குமரன் |
| வசந்தன் | கிறிஸ்தவம் | ரவீந்திரன் |
| வாகீசன் | வரலாறு | வாகீசன் |
| கியூபேட் | அரசியல் | கியூபேட் |

ஆரம்பம்: 07.01.2001 ஞாயிறு
யாழ்ப்பாணம்: 9.00 மணி (ப.நே.) இணுவில்: 8.00 மணி (ப.நே.)
அனுமதிகளை முன்கூட்டிப் பெற்றுக்கொள்ளவும்.
பிரிவு I, பிரிவு II
A/L 2001, 2002, 2000 Day Class நடைபெறுகின்றன.
(82033)


## மரண அறிவித்தல்

### திருமதி நடராஜா பூங்கோதை

(சிவஞான பூங்கோதை)

இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் குப்பிளான் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நடராஜா பூங்கோதை அவர்கள் நேற்று (26.12.2000) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி நடராஜா(கோட்டை) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகளும், ஸ்ரீமானின்(கிராம அலுவலர், இணுவில் தென்மேற்கு, J/188) அன்புத் தாயாரும், ரோகினியின் அன்பு மாமியாரும், குகாயினி, ஸ்யாமினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற இராசசூரியர்(ஓய்வுபெற்ற பொறியியலாளர், கொழும்பு), குமாரசாமி (கனடா), பத்மாவதி(மானிப்பாய்), காலஞ்சென்ற பகவதி(யாழ்ப் பாணம்), புவனேஸ்வரி, கமலாட்சி(கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம், மகேஸ்வரி (உரும்பிராய்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(27.12.2000) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் குப்பிளான் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந.ஸ்ரீமான் (மகன்)
கிராம அலுவலர்.

குப்பிளான் தெற்கு,
குப்பிளான்.

(C/14482)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.12.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.